Registered as a NewspaPer

# உதயன்

விலை ரூபா 6-00

கடர்:14 வள்ளுவர் ஆண்டு 2030 கார்த்திகை 02 வியாழக்கிழமை (18-11-1999) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 306

# இடம் பெயர்ந்த மக்கள் மீண்டும் வவுனியா நகருக்கு திரும்புகின்றனர்

## வழமை நிலை ஏற்படுகின்றது

வவுனியா, நவம்பர் 18

வவுனியா நகரப் பகுதியில் இருந்து அண்மையில் இடம்பெயர்ந்து பாதுகாப்பான இடங்களில் வாழ்ந்து வந்த மக்கள் நேற்றுக் காலை முதல் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பத் தொடங்கி உள்ளனர்.

சில வங்கிகள், அரச அலுவலகங்கள் என்பன நேற்றுத் திறந்திருந்தன. எனினும் அலுவலர்களின் வரவு குறைவாகவே காணப்பட்டதாக வவுனியாச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த 10 ஆம் திகதி புதன்கிழமை வவுனியா நகரப் பகுதி மக்கள் மாவட்டத்தின் சில பகுதிகளுக்கும் நாட்டின் தென் பகுதிகளுக்கும் இடம்பெயர்ந்து சென்றிருந்தனர்.

இவர்களில் இராசேந்திர குளம், ஆசிக்குளம், சிதம்பரபுரம், கந்தபுரம், கோமரசன் குளம் ஆகிய பகுதிகளில் தங்கி இருந்த மக்களில் பெரும் பகுதியினர் நேற்று வவுனியா திரும்பியதாகத் தெரிவிக்கப்பட்டது.

பாடசாலைகளிலும் மரங்களின் கீழும் தற்காலிக கூடாரங்களிலும் வாழ்ந்து வந்தவர்களில் பலரே உடனடியாக வீடு திரும்பி உள்ளனர் என்றும்—

உறவினர்கள், நண்பர்கள் வீடுகளிலும் நாட்டின் தெற்குப்பகுதிக்கும் சென்று தங்கி உள்ளவர்கள் படிப்படியாகவே வீடு திரும்பி வருவதாகவும்—

தெரிவிக்கப்பட்டது.

கடும் மழை பெய்து கொண்டிருந்த போதும் மக்கள் வீடு திரும்பியதைக் காண முடிந்ததாக நேரில் கண்டவர்கள்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## லங்காமுடித்த கப்பலில் நேற்று 530 பயணிகள் வந்தனர்

திருகோணமலை, நவ. 18

திருகோணமலையிலிருந்து 530 பயணிகளை ஏற்றிக்கொண்டு லங்கா முடித்த கப்பல் நேற்று காங்கேசன்துறை வந்து சேர்ந்தது.

சொந்த விடயங்களுக்காக தென்பகுதிக்குச் சென்றிருந்தவர்களும் வவுனியா கல்விக் கல்லூரி மாணவர்கள் 50 பேரும் இந்தக் கப்பல் மூலம் யாழ். வந்து சேர்ந்தனர்.

இதேவேளை திருகோணமலைக்கும் — காங்கேசன்துறைக்கும் இடையிலான அடுத்த பயணிகள் கப்பல் சேவை அடுத்த மாத நடுப்பகுதியில் இடம்பெறுமெனத் திருமலைப் பட்டணமும் சூழலும் பிரதேச செயலகம் தெரிவித்துள்ளது

(இ-7-150-139)

# கல்விச் சுற்றுலா சென்ற மாணவர் நால்வர் கடலில் மூழ்கி நேற்று மரணம்

## வடமராட்சிப் பகுதி சோகமயம்

வடமராட்சி, நவ. 18

கல்விச் சுற்றுலா சென்ற உயர்தர வகுப்பு மாணவர்கள் நால்வர் கடலில் மூழ்கி உயிரிழந்த பரிதாபச் சம்பவம் நேற்றுக் காலை 9-45 மணியளவில் பருத்தித்துறைக் கடற்பரப்பில் இடம்பெற்றது.

உயிரிழந்த மூன்று மாணவர்களின் சடலங்கள் சுழியோடிகளினால் மீட்கப்பட்டன. மற்றைய மாணவனின் சடலத்தைத் தேடும் பணி நேற்று மாலை வரை தொடர்ந்தது.

இவர்களுடன் கடல் அலையால் இழுத்துச் செல்லப்பட்ட ஏனைய மூன்று மாணவர்கள் தெய்வாதீனமாக உயிர் பிழைத்துக் கொண்டனர்.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த பூரணமூர்த்தி கந்தர்வன் (வயது 19), சுந்தரலிங்கம் சிவோத்தமன் (வயது 20), சிவநாதன் ரவிசங்கர் (வயது 18), பாலகிருஷ்ணன் பிரதீபன் (வயது 18) ஆகியோரே உயிரிழந்தவர்களாவர்.

சம்பவம் பற்றி மேலும் தெரிவிக்கப்படுவதாவது:-

அடுத்த வருடம் ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் உயிரியல் பிரிவு மாணவர்களுக்குக் கடலக

(10 ஆம் பக்கம் பார்க்க)

## 4 பெண்கள் உட்பட 29 பேர் காங்கேசனில் தடுத்து வைப்பு

காங்கேசன்துறை தடுப்பு முகாமில் தற்பொழுது 4 பெண்கள் உட்பட 29 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று நேற்று அங்கு விஜயம் மேற்கொண்டு கைதிகளைப் பார்வையிட்டுத் திரும்பிய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட இணைப்பாளர் எஸ்.ஸ்ரீதரன் தெரிவித்தார்.

ஏற்கனவே அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களுடன் கடந்த வாரம் அனுப்பி வைக்கப்பட்ட 4 பேரின் விவரம்

(10 ஆம்பக்கம் பார்க்க)

## திருமலையில் சைக்கிள் குண்டு

மட்டக்களப்பு, நவ. 18

திருகோணமலையில் நேற்று நண்பகல் சைக்கிள் குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

நகரின் மத்தியில் மணிக்கூண்டுக் கோபுரம் அருகே நிறுத்தி வைத்திருந்த சைக்கிளில் பொருத்தப்பட்ட குண்டு வெடித்ததாகக் கூறப்படுகின்றது.

இந்தக் குண்டு வெடிப்பில் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என்று திருகோணமலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(இ-21)

## மூன்றாவது நாளாக நேற்றும் பகிஷ்கரிப்பு

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவன் செல்வநாயகம் சுகந்தனை விடுதலை செய்யுமாறு கோரி மூன்றாவது நாளாக நேற்றும் யாழ். பல்கலைக்கழக மாணவர் தமது வகுப்புக்களைப் பகிஷ்கரித்தனர்.

கலைப்பீடத்தைச் சேர்ந்த மாணவர்கள் அனைவரும் நேற்றைய பகிஷ்கரிப்பில் கலந்துகொண்டனர்.

இந்த மாணவனின் விடுதலை தொடர்பாக சட்டமா அதிபருக்கு யாழ். பல்கலைக் கழகம் சார்பில் சட்டத்தரணி சாந்தா அபிமன்னசிங்கம் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அதேசமயம் —

செ. சுகந்தனை விடுதலை செய்வதற்கான நடவடிக்கைகளை சட்டமா அதிபர் மேற்கொண்டு வருவதாகத் தெரிய வருகிறது.

(இ-5-6)

## சிப்பாய் உயிரிழப்பு

கொழும்பு, நவ. 18

திருகோணமலை ஜமாலியா நகரப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு ஓட்டோ ஒன்றில் வந்த விடுதலைப் புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்ததாகப் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் நேற்று அறிவித்தது:

(இ-7)

## தேர்தலை நடத்தக் கோரி ரிட் மனு

மட்டக்களப்பு, நவ. 18

வடக்கு- கிழக்கு மாகாண சபைத் தேர்தல்கள் உடனடியாக நடத்தப்படல் வேண்டுமெனக் கோரி வவுனியா வாசி ஒருவர் நேற்றைய தினம் கொழும்பு உயர் நீதிமன்றத்தில் ரிட்மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

எஸ்.எம். குமாரசிங்க என்பவரே இவ்வாறு வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

வடக்கு — கிழக்கு மாகா

(10 ஆம் பக்கம் பார்க்க)

## விமானசேவை இன்றும் இல்லை

யாழ்ப்பாணம், நவ. 18

பலாலிக்கும் — இரத்மலானைக்கும் இடையிலான பயணிகள் விமானசேவை இன்றும் இடம்பெறாது என்று யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் தெரிவித்தது.

நாளையும் விமான சேவை இடம்பெறுவது சந்தேகம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த இரு நாள்களாகச் சேவை இடம்பெறாதது குறிப்பிடத்தக்கது.

(இ-3)

## நூற்றுக்கணக்கான பயணிகள் ஏமாற்றத்துடன் திரும்பினர்

கொழும்பு, நவ. 18

இரத்மலானைக்கும் — பலாலிக்கும் இடையிலான பயணிகள் விமானசேவை தடைப்பட்டிருப்பதால் தினமும் நூற்றுக்கணக்கான பயணிகள் இரத்மலானை விமான நிலையத்துக்குச் சென்று ஏமாற்றத்துடன் திரும்புகின்றனர் என்று கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்றைய தினம் இரத்மலானை விமான நிலையத்துக்குச் சென்ற பயணிகளின் பெயர், முகவரி மற்றும் தொலை

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பழுதடையக் கூடிய பொருளுக்கு கப்பல் கட்டணம் இல்லை

யாழ்ப்பாணம், நவ. 18

யாழ்ப்பாணத்தில் இருந்து கப்பல் மூலம் கொழும்புக்கு கொண்டு செல்லும் பொருள்களில் பழுதடையக் கூடிய பொருள்களுக்கு இனி கப்பல் கட்டணம் அறவிடப்படமாட்டாது.

மேற்கண்டவாறு யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த மாதம் அத்தியாவசிய சேவை ஆணையாளர் எமது மாவட்டத்துக்கு வருகை தந்த போது யாழ்.

(10ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# மரண அறிவித்தல்கள்

## திருமதி இரத்தினம் மாணிக்கம்
(தங்கம்)

ஒட்டுமடத்தைச் சேர்ந்த திருமதி இரத்தினம்—மாணிக்கம் (தங்கம்) நேற்றுக் காலமானார்,

அன்னார் காலஞ்சென்ற இரத்தினத்தின் அன்பு மனைவியும் தனநாயகம், துரைநாயகம், இராஜநாயகம், சரஸ்வதி, இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் செல்லத்துரை, ஆனந்தசுபீஸ்கரன், பாக்கியலட்சுமி, சரஸ்வதி (பேபி), இந்திரா ஆகியோரின் அன்பு மாமியாரும் சயந்தன், நிலோஷன், நிரோஷன், துளசி, கிருஷிகா, சோபிகா, சுகன்யா, சிந்துஷா, தர்ஷிகா, லக்ஷிகா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (18-11-99) வியாழக்கிழமை பகல் 1-00 மணிக்கு அவரின் இல்லத்தில் இருந்து தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. தனநாயகம்
(மகன்)

242/1, மானிப்பாய் வீதி,
ஒட்டுமடம், யாழ்ப்பாணம்

(71071)

---

திருமதி
## தங்கரத்தினம் கந்தையா

உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த திருமதி தங்கரத்தினம் கந்தையா 17-11-99 புதன்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற குருநாதர் தில்லைவனத்தின் மகளும் காலஞ்சென்ற தம்பையா கந்தையா (தறுமர்) வின் அன்பு மனைவியும் தறுமஜோதி (கனடா), தங்கராஜா (வவுனியா), சந்திரஜோதி, இந்திரஜோதி, (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், இரத்தினசிங்கம் (கனடா), இராசேந்திரம், பூபாலசிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் மாமியாரும் சுஜாயினி (UK), சுஜித்தா (கனடா), சுகந்தி (கனடா), துளசி (கனடா), தக்ஷி (யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை) பாலகிருஸ்ணன் (ஜேர்மனி), ஜனனி (ஜேர்மனி), நரேஸ் (ஜேர்மனி) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் அன்னாரது இல்லத்தில் இன்று (18-11-99) வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இளங்காட்டு மைதானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவோடு ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ. இராசேந்திரம்.
(மருமகன்)

ஞானவைரவர் கோயில் ஒழுங்கை,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

(71042)

---

## தம்பிப்பிள்ளை பாலசிங்கம்
[Retired Wireless Operator - Police Dept.)

மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை பாலசிங்கம் 16-11-99 காலை 9.00 மணியளவில் இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் தம்பிப்பிள்ளை— பார்வதி ஆகியோரின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற (மந்திகை) சதாசிவம் — தெய்வானை ஆகியோரின் மருமகனும் யோகம்மா பேபி (கனடா) யின் அன்புக் கணவரும் கனடாவில் வசிக்கும் பாலயோகினி, பாலயோகரஞ்சிதம், பாலயோகேந்திரன், பாலலோகினி, பாலயோகேஸ்வரன், பாலநந்தினி, பாலநிர்மலன், பாலசிறீதர் ஆகியோரின் அன்புத் தந்தையும் சறோஜினிதேவி, குணவீரசிங்கம் (இந்தியா), சத்தியநாதன் (ஜெர்மனி), தேவரஞ்சிதமலர். சற்குணானந்தம் (புதுக்குடியிருப்பு), சகுந்தலாதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரரும் கனடாவில் வசிக்கும் இராமநாதன், மகேந்திரன், ரஞ்சினி, புவனேந்திரன், (பாபு), நவா மற்றும் ரேவதி கிருபாகரன் (மட்டக்களப்பு], பாலசுரேஷ் (ஜேர்மனி), பிரபாகரன் (பருத்தித்துறை], சுதாகரன்,(ஜேர்மனி), கிருபாகரன். (கொழும்பு), மட்டுவிலைச் சேர்ந்த லசீகரன். மயூரன், மயூதினி, மயூரவன், பகீரதன், ஆகியோரின் அன்பு மாமனாரும் பாலசுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற முகாமையாளர் மக்கள் வங்கி, சாவகச்சேரி) கெங்லாச்சிப்பிள்ளை (இந்தியா), கமலேஸ்வரி [ஜேர்மனி], காலஞ்சென்ற வெற்றிவேலு, பரமேஸ்வரி (புதுக்குடியிருப்பு), ஆகியோரின் மைத்துனரும், நீலாவதி [பருத்தித்துறை], கிருபாகரன், [மட்டக்களப்பு], செல்வகுமார் [சுவிஸ்], ஜீவகுமார் [ஜேர்மனி], இந்தியாவில் வசிக்கும் ஜீவகா, இரஜிதா, அகிலன், ஈஸ்வரகுமார், விஜிதா, ஜானகி, சிந்துஜா, ஜேர்மனியில் வசிக்கும் சத்தியாபிரேம், வித்தியா, ஜெனி, புதுக்குடியிருப்பில் வசிக்கும் சற்குணேஸ்வரி, ரமேஷ், இரத்தினேஸ்வரன், சற்குணேஸ்வரன், ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பார்வதி - [தாய்]
தாயகம், மட்டுவில் மத்தி,
சாவகச்சேரி.

மகன் Bala Balasingam [Sinagi],
1757 - Rowntree Court,
Mississauga Ontario,
L4 W4, Y3- Canada.
TP - 001 - 9052069931.

[71068]

---


வின்சர் அச்சுவேலி.
பார்த்தீபன் - சாய்குமார்
நடித்த
**தையல்காரன்**
காட்சிகள்: 10-30, 2-30
T.P.No.070-212223
070 - 212678
(71007)

**ராஜா**
யாழ்ப்பாணம்
விஜய் - சுவாதி
மற்றும் பலர் நடித்த
**செல்வா**
10-30, 2-30.
(சி/9815)

**நாகம்ஸ்**
சுன்னாகம்
விஜய் — சாலினி
நடித்த
**காதலுக்கு மரியாதை**
காட்சிகள்:
11-00, 2-30.
(புதிய நேரம்)
(70964)


---

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்

ஈராண்டுப் பகுதிநேர
பட்டப்பின் கல்வித்தகைமை
கற்கைநெறி
**1999 / 2000**

புதிய
அனுமதிக்கான
**நேர்முகத் தேர்வு**

மேற்படி கற்கைநெறிக்கு விண்ணப்பித்துள்ள தகுதி வாய்ந்த விண்ணப்பதாரிகளுக்கான நேர்முகத் தேர்வு 1999-11-20 ஆம் திகதி முற்பகல் 9 மணிக்குப் பல்கலைக்கழகச் சபை அறையில் நடைபெறும்.

விண்ணப்பதாரிகள் பின்வரும் ஆவணங்களின் மூலப் பிரதிகளுடன் நேர்முகத் தேர்விற்குச் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்:

1) பட்டத் தகைமைச் சான்றிதழ்
2) பிறப்புச் சான்றிதழ்
3) அதிபரின் சிபார்சுக் கடிதம்

குறிப்பு:

தகுதி வாய்ந்த விண்ணப்பதாரிகளுக்குத் தனிப்பட்ட முறையில் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. கடிதம் கிடைக்கப் பெறாதவர்கள் பீடாதிபதி அலுவலகம், உயர் பட்டப் படிப்புகள் பீடத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

—பதிவாளர்
யாழ். பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.
(சி/9881)

---

# கண்ணீர் அஞ்சலி

திரு. சிவநாதன் [பிரதி முகாமையாளர்]
திருமதி சி. சாந்தநாயகி
ஆகியோரின் அன்பு மகன்

## செல்வன் சி. ரவிசங்கர்
(ஹாட்லிக் கல்லூரி உயர்தர வகுப்பு முதன்மை மாணவன்)

ஆழ்கடலில் ஆய்வுக்குச் சென்ற போது அமைதியாகி விட்டமையையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

முகாமையாளர், ஊழியர்கள்,
இலங்கை வங்கி, நெல்லியடி.

[சி/9883]

---

# கண்ணீர் அஞ்சலி

நேற்றையதினம் 17-11-99 இல் பருத்தித்துறை கடலில் அகால மரணமடைந்த எமது கல்வி நிலையத்தில் A/L 2000 ஆண்டில் கல்வி கற்கும் மாணவர்களான

## செல்வன் சுந்தரலிங்கம் சிவோத்தமன்
## செல்வன் பாலகிருஷ்ணன் பிரதீபன்
## செல்வன் பூரணமூர்த்தி கந்தர்வன்
## செல்வன் சிவநாதன் ரவிசங்கர்

ஆகியோரின் மறைவினால் துயருறும்குடும்பத்தினருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

நிர்வாகி, ஆசிரியர்,
மாணவர்கள்,

BEACON,
வதிரி, கரவெட்டி.
(சி/9886)

---

# கண்ணீர் அஞ்சலி

எமது சக உத்தியோகத்தர்
திரு. வி. சி. சிவநாதன்
(உதவி முகாமையாளர், இலங்கை வங்கி, நெல்லியடி)
அவர்களின் சிரேஷ்ட புத்திரன்

## செல்வன் ரவிசங்கர்
(க. பொ. த. உயர்தர மாணவன், ஹாட்லிக் கல்லூரி)

அவர்களின் அகால மரணத்தையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குவதுடன், துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

முகாமையாளரும் ஊழியர்களும்
இலங்கை வங்கி, பருத்தித்துறை.

(சி/9882)

---

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## திருமதி முருகேசு இராசம்மா
( இளைப்பாறிய பெண்கள் கேஎிப்பாதுகாவலர் கீரிமலை )

பிறப்பு 25 - 05 - 1925

இறப்பு 24 - 11 - 1997

திதி: 18 - 11 - 1999

என்றென்றும் உங்கள் நீங்காத நினைவலைகளுடன்

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

[சி/9870]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு - கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு

## வடக்கு - கிழக்கு மாகாண பொதுச் சேவையின் சாரதி வகுப்பு II 'ஆ' பதவிக்கு ஆள்சேர்ப்பு செய்வதற்கான

# திறந்த போட்டிப் பரீட்சை - 1999

1. வடக்கு — கிழக்கு மாகாண பொதுச் சேவையின் வெற்றிடமாக உள்ள சாரதி வகுப்பு II 'ஆ' பதவிக்கு ஆள்சேர்ப்பு செய்வதற்காக கீழ் குறிப்பிடப்பட்ட தகைமையை உடைய இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் வடக்கு — கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரால் கோரப் படுகின்றன. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 1999-12-30 ஆகும்

2. இப் பதவிக்குரிய வெற்றிடங்களின் எண்ணிக்கை அண்ணளவாக 50 ஆகும். இவ் வெற்றிடங்களின் எண்ணிக்கை மேற்கூறப்பட்டவாறு இருந்தபோதிலும் சேவையின் தேவையைப் பொறுத்து வெற்றிடங்களின் எண்ணிக்கை குறைவதற்கோ அல்லது கூடுவதற்கோ இடமுண்டு. எவ்வாறாயினும் நிரப்பப்படும் வெற்றிட எண்ணிக்கை தொடர்பான இறுதித் தீர்மானம் வடக்கு — கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவுக்குரியதாகும்.

3. சம்பள அளவுத் திட்டம்: ரூபா 45, 180 – 23 × 1, 320 – 75, 540 (T - 1-4)

4. தகைமைகள்:

4.1 விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.

4.2 சிறந்த தேகாரோக்கியமும் நன்னடத்தையும் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

4.3 விண்ணப்ப முடிவு திகதியன்று 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரச சேவையில் மாகாண அரச சேவையில் உள்ளவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல)

4.4 வடக்கு — கிழக்கு மாகாணத்தில் நிரந்தரமாக வதிபவராக இருத்தல் வேண்டும். அதாவது விண்ணப்ப முடிவு திகதிக்கு முன்னுள்ள 06 ஆண்டு காலப் பகுதியில் ஆகக் குறைந்தது மூன்று ஆண்டுகளாவது வடக்கு கிழக்கு மாகாணத்தில் வசித்திருத்தல் வேண்டும்

பின்வரும் ஆவணங்கள் மூலம் நேர்முகப் பரீட்சையின்போது இவற்றை நிருபித்தல் வேண்டும்.

1) வாக்காளர் இடாப்பின் பிரதி
2) வதிவு தொடர்பான கிராமசேவை உத்தியோகத்தரிடம் பெற்ற சான்றிதழ்

குறிப்பு: வடக்கு - கிழக்கு மாகாணத்தினை நிரந்தர பிறப்பிடமாகவோ அல்லது வதிவிடமாகவோ கொண்டிருந்து வடக்கு - கிழக்கு மாகாணத்தில் தற்போதுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக இடம் பெயர்ந்து வேறு மாகாணங்களில் தற்காலிகமாக வசிப்போரும் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம். ஆனால் அவர்கள் தற்போதைய தற்காலிக வதிவிடத்தை நிரந்தர வதிவிடமாகக் காட்டி வேறு பதவிகளுக்கு விண்ணப்பித்திருத்தல் கூடாது இதனை அத்தாட்சிப் படுத்தும் ஆவணமும், இடம் பெயர்ந்து தற்காலிகமாக வசிப்பதை உறுதிப்படுத்தும் ஆவணமும் நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்கப் படல் வேண்டும்.

4.5 கல்வித் தகைமை:

4.5.1 அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது அரசாங்கப் பாடசாலையில் ஆண்டு 9 அல்லது தரம் 8 இல் சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.

4.6 தொழில்சார் தகைமைகள்:

4.6.1. 24 அந்தருக்கு குறைந்த எடை உள்ள தனியார் வாடகை மோட்டார் கார்களையும், ஸ்கிரான் வாகனங்களையும் செலுத்துவதற்கும் மோட்டார் போக்குவரத்து ஆணையாளரால் வழங்கப்பட்ட தேர்ச்சிச் சான்றிதழ் வைத்திருப்பவராக இருத்தல் வேண்டும்.

4.6.2. மோட்டார் வாகன சாரதி என்ற நிலையில் மூன்று வருட சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். (சான்றிதழ் மூலம் நிரூபித்தல் வேண்டும்)

4.6.3. ஆகக் குறைந்தது 5 அடி உயரம் இருத்தல் வேண்டும்.

4.6.4. இரவிலும் பகலிலும் வாகனத்தைச் செலுத்துவதற்குச் சீரிய உடல் நலமும் நல்ல பார்வையும் பெற்றிருத்தல் வேண்டும்.

4.6.5. நெடுஞ்சாலை போக்குவரத்து விதிக்கோவை அறிவினை நன்கு பெற்றிருத்தல் வேண்டும்.

5. ஆள்சேர்ப்பு முறை:

எழுத்துப் பரீட்சை பெறுபேற்றின் திறமை அடிப்படையிலும் அரசாங்க தாபனக் கோவை விதிகள் அங்கீகரிக்கப்பட்ட ஆள் சேர்ப்புத் திட்டம் அரச சுற்று நிருபங்கள் ஆகியவற்றிற்கு இணங்க ஆள்சேர்ப்பு செய்யப்படும்.

5.1. எழுத்துப் பரீட்சை:

இவ் எழுத்துப்பரீட்சையானது தமிழ், சிங்களம் ஆகிய மொழிகளில் நடத்தப்படும். எழுத்துப் பரீட்சை பின்வரும் இரு வினாத்தாள்களைக் கொண்டிருக்கும். இவ் எழுத்துப் போட்டிப் பரீட்சையில் சித்தி பெறுவதற்கு ஒவ்வொரு பாடங்களிலும் 40% புள்ளிகளையோ அல்லது அதற்கு மேலான புள்ளிகளையோ பெற்றிருத்தல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| 1. பொருத்தத்தன்மை | 1 மணித்தியாலம் | 100 புள்ளிகள் |
| 2. பொது அறிவு | 45 நிமிடங்கள் | 100 புள்ளிகள் |

பொருத்தத்தன்மை—இந்த வினாப்பத்திரம் பரீட்சார்த்தியின் எளிய வினாத்திறன் எண் தேர்ச்சிகள் தீர்மானம் எடுக்கும் திறன், நல்ல உளப்பாங்குகள் ஒழுக்கம் என்பவற்றைப் பரீட்சிக்கும் வகையில் தயாரிக்ககப்படும்.

பொது அறிவு—இந்த வினாப்பத்திரம் இலங்கை பூகோளவியல் நிலைகள் போக்குவரத்து விவகாரங்கள், நாளாந்த தொழிற் பிரச்சினைகள் அத்தகைய பிரச்சினைகளை எதிர்நோக்குவதற்குத் தேவையான பொது உணர்வு ஆகியன அடங்கும் வகையில் தயாரிக்கப்படும்.

எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்து திறமை அடிப்படையில் தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகள் வாகன ஒட்டுதல் தொடர்பான அறிவினை பரிசோதிப்பதற்காக மூன்று அங்கத்தவர்கள் அடங்கிய குழுவினால் நடாத்தப்படும் விசேட பரீட்சையிலும் சித்தியடைதல் வேண்டும். இப்பரீட்சையில் 40% புள்ளிகளையோ அல்லது அதற்கு மேலான புள்ளிகளையோ பெற்றவர்களில் திறமை வரிசை அடிப்படையில் நியமனத்திற்கு தெரிவு செய்யப்படுவர்.

6. பரீட்சைக் கட்டணம்:

விண்ணப்பதாரி வதியும் வடக்கு—கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள பிரதேச செயலகம் ஒன்றில் ரூபா 200 செலுத்தியதற்கான பற்றுச் சீட்டினை விண்ணப்பத்துடன் கழராதவாறு ஒட்டி இணைத்து அனுப்புதல் வேண்டும். இப்பணம் வடக்கு— கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் 6004 இலக்க வைப்புக்கணக்கின் வரவில் சேரக்கூடியதாக பிரதேச செயலகத்தினால் கணக்கு வைக்கப்படல் வேண்டும். அத்தகைய பற்றுச்சீட்டின்றி அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்பதுடன் எக்காரணம் கொண்டும் செலுத்திய பரீட்சைக் கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது என்பதையும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

வடக்கு—கிழக்கு மாகாணத்தில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக வேறு மாகாணங்களுக்கு தற்காலிகமாக இடம்பெயர்ந்து உள்ளவர்கள் மட்டும் பரீட்சைக் கட்டணமாக ரூபா 200 இற்கான காசுக்கட்டளையை செயலாளர் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு என்ற பெயருக்கு பெற்று விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.

7- விண்ணப்பிக்கும் முறை:

இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தின்படி ஏ4 அளவிலான ( 21 செ.மீ X 29 செ மீ ) தாளின் இரு பக்கங்களையும் உபயோகித்து விண்ணப்பத்தை ஒழுங்கு செய்து கொள்ள வேண்டும். இலக்கம் 1 தொடக்கம் 10 வரையுள்ள பகுதியை அதன் முற்பக்கத்திலும் எஞ்சிய பகுதியை இரண்டாம் பக்கத்திலும் அடங்கும் வண்ணம் ஒழுங்கு செய்தல் வேண்டும். பூர்த்தி

(8 ஆம் பக்கம் பார்க்க)

# மாதிரி விண்ணப்பப்படிவம்

### வடக்கு-கிழக்கு மாகாண பொதுச்சேவையின் சாரதி வகுப்பு II 'ஆ' பதவிக்கு ஆள்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை-1999

சுட்டெண்: [ ]

(அலுவலக உபயோகத்திற்கு)

01. முதலெழுத்துக்களுடன் விண்ணப்பதாரியின் பெயர்:
வண / திரு / திருமதி / செல்வி:-
தமிழில் / சிங்களத்தில்:
ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்):-

02. முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள்:-
தமிழில் / சிங்களத்தில்;-
ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்):-

03. தற்போதைய நிரந்தர முகவரி:-
தமிழில் / சிங்களத்தில்:-
ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்):-

04. பரீட்சைக்குத் தோற்றும் மொழி:
தமிழ் T / சிங்களம் S

05. தெரிவு செய்யும் பரீட்சை நகர எண்

(09 ஆவது பந்தியில் குறிப்பிட்ட பரீட்சை நகர இலக்கத்தைக் குறிப்பிடவும்)

06. இனம்:

| | | | |
|---|---|---|---|
| சிங்களவர் | - 1 | இந்தியத் தமிழர் | -4 |
| இலங்கைத் தமிழர் | - 2 | ஏனையவர் | -5 |
| முஸ்லிம் | - 3 | | |

07. நீங்கள் இலங்கைப் பிரஜையா?
வம்சாவளியினாலா / பதிவு செய்யப்பட்டதனாலா என்பதைக் குறிப்பிடுக.

08. விவாகமானவரா / விவாகமாகாதவரா?

09. பிறந்த திகதி: வருடம்: மாதம்: திகதி:
1999 – 12 – 30 ஆம் திகதியன்று வயது:
வருடங்கள்: மாதம்: நாள்கள்:

10, (1) நீங்கள் நிரந்தரமாக வதியும் மாவட்டம்:
(2) பிரதேச செயலாளர் பிரிவு:
(3) வதியும் கால எல்லை: தொடக்கம் வரை
(4) வடக்கு—கிழக்கு மாகாணத்திலிருந்து தற்காலிகமாகஇடம்பெயர்ந்து இருப்பின் தங்கள் நிரந்தர வதிவு மாவட்டம்:
(5) தற்காலிகமாக இடம்பெயர்ந்து வதியும் மாவட்டம் .... ........... மாகாணம் ..............
இடம்பெயர்ந்த ஆண்டு ......... மாதம் ...........
திகதி: ......... ..

11. கல்வித் தகைமை:
1. கடைசியாக சித்தியடைந்த வகுப்பும் பாடசாலையும்:-

12. 1. சாரதி அனுமதிப் பத்திரம் பெற்ற ஆண்டு-:
2. அனுபவம்:-

13. நீர் சட்டம் மன்றம் ஒன்றினால் எப்போதாவது ஏதேனும் குற்றத்திற்காக தண்டிக்கப்பட்டுள்ளீரா?

14. பணம் செலுத்திய பற்றுச்சீட்டை கழராதவாறு இங்கு ஒட்டவும்.

[ ]

15. இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விவரங்கள் யாவும் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் உண்மையானவை என்றும் பரீட்சைக்கட்டணம் செலுத்தப்பட்ட............பிரதேச செயலகத்தின்........... ஆம் இலக்க ........... ஆந் திகதிய பற்றுச்சீட்டு இதில் ஒட்டப்பட்டுள்ளது என்றும் இப்பரீட்சை விதிகளுக்கு அமைந்தொழுகி நடப்பதற்கும் சம்மதிக்கிறேன். மேலும் இப்பரீட்சை நிபந்தனைகளின்படி நான் தகுதியற்றவரெனக் கண்டு பிடிக்கப்பட்டால் பரீட்சையின் முன்னரோ பரீட்சையின்போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எனது பரீட்சார்த்த தன்மையை இரத்துச் செய்வதற்கு எடுக்கும் முடிவுகளை ஏற்றுக் கொள்வதற்கும் எனது இணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றேன்.

திகதி: ..................................

விண்ணப்பதாரியின் கையொப்பம்

16. விண்ணப்பப் பத்திரத்திலுள்ள பரீட்சார்த்தியின் கையொப்பம் அரசாங்கப் பாடசாலை அதிபர், சமாதான நீதிவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத் தரணி, பிரசித்த நொத்தாரிசு படை தாங்கு சேவையின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், பொலீஸ் சேவையின் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவி வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது வருடாந்த திரட்டிய வேதனமாக ரூபா 74, 160/-ற்கு மேற்பட்ட சம்பளத்தை உடைய அரச சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர் ஆகிய ஒருவரால் சான்றுபடுத்தப் பட வேண்டும்.

17. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல்:
விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற வண/ திரு/ திருமதி செல்வி .......................................................
என்பவர் எனக்கு நன்கு தெரிந்தவர் எனவும்........... ஆந் திகதி அவர் என் முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்
திகதி:

..............................

கையொப்பத்தை உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் கையொப்பம்

கையொப்பத்தை உறுதிப்படுத்துகின்ற உத்தியோகத்தரின் முழுப்பெயர்:
பதவி:
முகவரி (பதவி முத்திரை):

18. (வடக்கு - கிழக்கு மாகாணத்திலிருந்து தற்காலிகமாக வேறு மாகாணத்திற்கு இடம்பெயர்ந்துள்ளவர்களுக்கு)

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் கராச்சி நீதிமன்றில் நேற்று ஆஜர்

இஸ்லாமாபாத், நவ. 18

பாகிஸ்தானில் இராணுவப் புரட்சி மூலம் ஆட்சி கவிழ்க்கப்பட்டதை அடுத்துதடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் கராச்சியில் உள்ள பயங்கரவாத குற்றங்களை விசாரிக்கும் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர் செய்யப்படவிருந்தார் எனசெய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன.

இஸ்லாமாபாத்தில்தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த இவர் நேற்றுமுன்தினம் இரவு பொலீஸாரால் சட்டப்படி கைது செய்யப்பட்டு தனி விமானம் மூலம் கராச்சிக்கு கொண்டுவரப்பட்டார்.

கராச்சியில் சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ள இவர் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவிருந்தார் என்றும்—

அவரைமேலும் விசாரணை செய்யப் பொலீஸார் நீதிமன்றிடம் அவகாசம் கோரவிருக்கின்றார் என்றும்—செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன.

கொலை முயற்சி, விமானக் கடத்தல், கிறிமினல் சதி ஆகிய மூன்று குற்றச்சாட்டுக்கள் அவர் மீது சுமத்தப்பட்டுள்ளன என்றும்—

அந்தக் குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால் அவருக்கு மரணதண்டனை விதிக்கப்படலாம் என்றும்— கூறப்பட்டது. [இ-3]

# தமிழக மீனவரை பாதுகாக்க அதிவேகப் படகுகள் ரோந்து

சென்னை, நவ. 18

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படும் சம்பவங்களைத் தடுக்கும் வகையில் விசேட கண்காணிப்புத்திட்டம் ஒன்றை தமிழக அரசு நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ளது.

இந்தத் திட்டத்துக்கு ஏற்ப தமிழக அரசு ஐந்து அதிவேகப் படகுகளை கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடுத்தியுள்ளது என்றும்—

மீனவர்கள் மீன்பிடிக்கும் பகுதியில் அது பணியில் ஈடுபடும் என்றும்—

இலங்கைக் கடற்படைப் படகுகள் ஊடுருவினால் அவற்றின் மீது தாக்குதல் தொடுக்கப்படும் என்றும்— தமிழக அரசு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இலங்கைக் கடற்படையினால் இந்திய மீனவர்கள் எதிர் நோக்கும் தாக்குதல் அச்சுறுத்தலை அகற்றவும் —

இந்திய மீனவர்களை இயற்கை அனர்த்தங்களில் இருந்து பாதுகாக்கவும் இந்தத்திட்டம் உதவும் என்று கூறப்பட்டது. [இ-3-7]

## வாஜபாயை பாராட்டுகிறது அமெரிக்கா

வாஷிங்ரன், நவ. 18

இந்தியப் பிரதமராக வாஜ்பாய் பதவி ஏற்றதைப் பாராட்டி அமெரிக்கப் பிரதிநிதிகள் சபை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

இந்தியாவுடன் உறவுகளை சீராக வளர்க்க வேண்டும் என்று ஜனாதிபதி கிளின்ரனைக் கோரும் மற்றொரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டுள்ளது. (இ-3)

### உலக அரங்கில்

## இந்தோனேசியாவின் ஆசேமாநிலத்தில் விரைவில் சர்வஜன வாக்கெடுப்பு

ஜகார்த்தா, நவ. 18

இந்தோனேசியாவின் கட்டுப்பாட்டில் உள்ள ஆசேமாநிலத்துக்கு சுதந்திரம் வழங்குவது தொடர்பாக சர்வஜன வாக்கெடுப்பு ஒன்று நடத்தப்படவிருக்கின்றது.

இந்தோனேசியாவின் கட்டுப்பாட்டில் இருந்த கிழக்குத் திமோரில் நடத்தப்பட்ட சர்வஜன வாக்கெடுப்பில் மக்கள் அளித்த தீர்ப்பின்படி— அந்த மக்களின் விருப்பப்படி—சுதந்திரம் வழங்கப்பட்டிருந்தது.

அதைத்தொடர்ந்து ஆசேமாநிலத்துக்கும் சுதந்திரம் வழங்க சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படவிருக்கின்றது.

இந்த வாக்கெடுப்பு அடுத்த ஆண்டின் நடுப்பகுதியில் நடைபெறவிருக்கின்றது என்றும்—

அந்த மாநில மக்கள் சுதந்திரத்துக்கு ஆதரவாக வாக்களிக்கும் பட்சத்தில் சுதந்திரப்பிரகடனம் செய்யப்படும் என்றும் — இந்தோனேசிய அதிபர் வாஹீட் தெரிவித்துள்ளார்.

அந்த மாநிலத்துக்குச் சுயாட்சி வழங்குவது குறித்து அவர் கருத்து எதையும் தெரிவிக்கவில்லை.

இந்தோனேசியாவின் கட்டுப்பாட்டில் உள்ள ஏனைய மாநிலங்களும் சுதந்திரம் வேண்டிப் போராட்டம் நடத்துவதால் பல மாநிலங்கள் பிரிந்து செல்லக்கூடிய நிலை ஏற்படும் என்று அவதானிகள் கருத்து வெளியிட்டனர். (இ-3)

## 550 பேர் பலி

அங்காரா, நவ. 18

துருக்கியில் அண்மையில் ஏற்பட்ட நில நடுக்கத்தில் இறந்தோர் எண்ணிக்கை 550 ஆக உயர்ந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நில நடுக்கத்தில் சிக்கிய பொதுமக்களை மீட்கும் பணி தொடர்ந்து நடைபெறுகின்றது. (இ-3)

# இலங்கைக்கு மருந்து கடத்திய எழுவருக்கு சிறைத்தண்டனை

சென்னை, நவ. 18

தமிழ் நாட்டில் இருந்து இலங்கைக்கு மருந்து வகைகளைக் கடத்த முயன்ற சமயம் கைதான ஏழு தமிழர்களுக்கு மதுரை நீதிமன்று ஆறு மாதச் சிறைத்தண்டனை விதித்துள்ளது.

படகு மூலம் இலங்கைக்கு மருந்து வகைகளை கடத்த முயன்ற சமயம் கரையோரப் பொலீஸாரால் இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்றும் —

மதுரை நீதிமன்றத்தில் இவர்கள் ஆஜர் செய்யப்பட்ட சமயம் விசாரணை செய்யப்பட்டு தலா ஆறு மாத கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது என்றும் — தெரிவிக்கப்பட்டது.

இலங்கையர்களான கிருபாமூர்த்தி, சந்திரமோகன், சிவராசா ஆகியோரும் —

தமிழகத்தைச் சேர்ந்த ஐயாசாமி, கிறிஸ்தோபர் ஜெயராஜ், கூடன்குள படகு உரிமையாளர் சுடலைமணி ஆகியோரும் — சிறைத்தண்டனை விதிக்கப்பட்டவர்களாவர். [இ-3]

## பாக். மீது தடைவிதிக்க கோரிக்கை

வாஷிங்ரன், நவ. 18

பாகிஸ்தானுக்கு ராணுவ மற்றும்பொருளாதாரத்தடைகளை அமெரிக்கா விதிக்க வேண்டும் என்று அமெரிக்க பிரதிநிதிகள் சபை முடிவு செய்துள்ளது.

உடனடியாக அங்கு சுயேச்சையான தேர்தல் நடைபெற வேண்டும் என்று கோருவது என்றும் அந்த முடிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

# வங்கிக்கடன் பெறுவோர் மீது கடும் சட்ட நடவடிக்கை

இஸ்லாமாபாத், நவ. 18

பாகிஸ்தானில் உள்ள அரச வங்கிகளில் கடன் பெற்று மீளச் செலுத்தாது உள்ள அரசியல் வாதிகள் மற்றும் தொழில் அதிபர்கள் ஆகியோருக்கு எதிராகக் கடும் சட்டங்களை பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் முஷாரப் அறிவித்துள்ளார்.

அரசியல் செல்வாக்கு மிக்க அரசியல் வாதிகள், தொழில் அதிபர்கள் அரச வங்கிகளில் பெற்ற கடன்களை மீளச் செலுத்தாது டிமிக்கி விட்டு வருவதாகவும் —

இதனை அடுத்து அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது என்றும்—இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடன்களை மீள அளிக்க நேற்று நள்ளிரவு வரை காலக்கெடு வழங்கப்பட்டிருந்தது என்றும்.

அதற்குள் கடனை மீளச் செலுத்தாதவர்கள் கைது செய்யப்பட்டுச் சிறையில் வைக்கப்படுவர் என்றும் —

பின்னர் அவர்களின் சொத்துக்கள் அரசால் சுவீகரிக்கப்படும் என்றும் —

அந்தச் சொத்துக்களில் இருந்து கடன் மீளளிக்கப்படும் என்றும் — அந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

அத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் மீது சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

அரச வங்கிகளில் பெறப்பட்ட எண்ணூறு கோடி டொலர் கடன் தொகை மீளளிக்கப்படவில்லை என்று கூறப்பட்டது.

கடனைக்கட்டாது 'டிமிக்கி' விட்டுத்திரியும் சுமார் 300க்கு மேற்பட்டவர்களைக் கைது செய்ய விசேட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் அவர்கள் நாட்டை விட்டுவெளியேறாமல் கண்காணிப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளது. (எ-3)

---

# திறந்த போட்டிப் பரீட்சை - 1999...

(மூன்றாம் பக்கத் தொடர்)

செய்த விண்ணப்பங்களை 1999—12—30 ஆம் திகதிக்கு முன் "செயலாளர், மாகாண பொதுச் சேவை, ஆணைக்குழு வடக்கு—கிழக்கு மாகாணம். இல. 35, மக்கேய்சர் வீதி, உவர்மலை, திருகோணமலை" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வடக்கு—கிழக்கு மாகாண பொதுச் சேவைக்கு சாரதி II 'ஆ' வகுப்பிற்கு ஆள்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 1999 என பரீட்சையின் பெயர் குறிப்பிடப்படுதல் வேண்டும். (மாகாண அரசாங்க சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் தங்கள் விண்ணப்பங்களை திணைக்களத் தலைவரினூடாக அனுப்புதல் வேண்டும்) பூரணமற்றதும் உரிய தகைமைகளை கொண்டிராததும் குறித்த திகதிக்கு முன் கிடைக்கப்பெறாததுமான விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

விண்ணப்பதாரி ஒருவர் தகுதியற்றவரென கண்டுபிடிக்கப்பட்டால் பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது நிரந்தர நியமனத்தைப் பெற்ற பின்போ எக்கட்டத்திலும் அவரின் நியமனம் இரத்துச் செய்யப்படலாம். விண்ணப்பதாரி ஒருவர் அளித்த விவரங்கள், சான்றிதழ்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின் அல்லது அவர் ஏதேனும் முக்கிய விடயத்தை வேண்டுமென்று மறைத்திருந்தால் அவர் தெரிவிலிருந்து அல்லது சேவையில் இருந்து நீக்கப்படலாம்.

8, பரீட்சை நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட பரீட்சை நகரங்கள் பின்வருமாறு:-

| | | | | | |
|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | — 10 | வவுனியா | — 13 | அம்பாறை | — 16 |
| மன்னார் | — 11 | திருகோணமலை | — 14 | கிளிநொச்சி | — 25 |
| முல்லைத்தீவு | — 12 | மட்டக்களப்பு | — 15 | கல்முனை | — 26 |

கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை குறையுமிடத்து விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட பரீட்சை நகரம் அண்மையான நகரத்திற்கு மாற்றப்படலாம். இவ்வறிவித்தலில் ஏற்பாடு செய்யப்படாத / குறிப்பிடப்படாத எவையேனும் விடயங்கள் தொடர்பாகவும். தரப்பட்ட விளம்பரத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் தெரிவு நியமனங்கள் தொடர்பாகவும் வடக்கு—கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினாலேயே இறுதியானதும் முடிவானதுமான தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும்.

க. பரமேஸ்வரன்
செயலாளர்
மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு,
வடக்கு—கிழக்கு மாகாணம், திருகோணமலை.

## மாதிரி விண்ணப்......

(மூன்றாம் பக்கத் தொடர்)

மேற்படி விண்ணப்பதாரி வடக்கு - கிழக்கு மாகாணத்தை நிரந்தர பிறப்பிடமாக / வதிவிடமாக கொண்டவர் என்பதையும் அவர் .......... திகதி முதல் தற்காலிகமாக இடம்பெயர்ந்து .............. மாகாணத்தில் வசித்து வருகின்றார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி ....................

பிரதேச செயலாளர்/ கிராம சேவகர்
ஒப்பம்

பதவி:-
முகவரி:
(பதவி முத்திரை)

19. திணைக்களத் தலைவரின் உறுதியுரை:
இத்திணைக்களத்தில் தற்காலிக / நிரந்தர உத்தியோகத்தராகக் கடமையாற்றும் வண/திரு/திருமதி செல்வி ...................... அவர்களின் விண்ணப்பத்தை சிபார்சு செய்து சமர்ப்பிக்கின்றேன். அவர் இப்பதவிக்கு தெரிவு செய்யப்படுமிடத்து விடுவிக்க முடியும் என்பதையும் இவர் தனது சேவைக் காலத்தில் எவ்வித ஒழுங்காற்று நடைமுறைக்கும் உட்படவில்லை என்றும் சகல வேதன ஏற்றங்களையும் பெற்றுள்ளார் என்பதையும் இங்கு அவரால் குறிப்பிடப்பட்ட விடயங்கள் சரியானவை என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

..............................

திகதி:

திணைக்களத் தலைவரின்
கையொப்பமும் பெயரும்

பதவி:
முகவரி:
(பதவி முத்திரை)

(சி/9861)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் ஊழியர் போதியளவு இல்லை

யாழ்ப்பாணம், நவ. 18

யாழ்ப்பாணம் பெற்றோலியம் கூட்டுத்தாபனத்தில் ஊழியர் பற்றாக்குறை நிலவுவதால் பொதுமக்களுக்கு உரிய முறையில் சேவையாற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என கூட்டுத்தாபனபதில் பிரதேச முகாமையாளர் தெரிவித்தார்.

யாழ். பெற்றோலியம் கூட்டுத்தாபனத்தில் அதிகாரிகள் தரத்திலிருந்து சிற்றூழியர்கள் வரை பற்றாக்குறை நிலவுவதாகவும் —

இதன் காரணமாக குடாநாட்டில் திடீரென ஏற்படும் செயற்கைத் தட்டுப்பாடுகளின் போது பெற்றோல் நிலையங்களில் பொது மக்களுக்கு உரிய சேவை வழங்கப்படுகின்றதா என்பதை நேரில் அறியமுடியாதுள்ளது என்றும் —

அவர் சொன்னார்.

இதேவேளை —

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு அதிகாரிகளை நியமிப்பதற்கான நேர்முகப் பரீட்சை கடந்த மாதம் இங்கு நடத்தப்பட்டபோதும் இதுவரை எவரும் நியமிக்கப்படவில்லை என்று கூறப்பட்டது.

(ஐ-3-9-10)

## தபால் சேவையில் சகலரும் காப்புறுதி செய்ய வசதி

யாழ்ப்பாணம், நவ. 18

தபால் சேவையில் பணியாற்றும் ஓய்வூதியத்திற்குட்பட்ட நிரந்தர சேவையில் உள்ள அனைவருக்கும் காப்புறுதி செய்வதற்கான அனுமதி காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தால் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் நிரந்தர சேவையில் உள்ளவர்களுக்குச் சேவை அனுபவத்தின் அடிப்படையிலேயே காப்புறுதிக்கான அனுமதி வழங்கப்பட்டு வந்ததாகவும் —

அண்மையிலேயே மேற்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் — தபால் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

சேவையில் உள்ள திருமணமான ஒருவர் தனது குடும்பத்துக்கும், திருமணமாகாத ஒருவர் தனது பெற்றோருக்கும் அல்லது திருமணமாகாத தனது சகோதரிக்கும் அல்லது 18 வயதுக்கு உட்பட்ட தனது சகோதரனுக்கும் காப்புறுதிக்கான அனுகூலங்களைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

(இ-3-10)

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



கணபதியின் தாள் சேர்ந்த கணேசன்

அமரர்

**சி. நா. கணேசன் B. O. L.**

(அளவையூர் வித்துவான், பண்டிதர், சைவப்புலவர் சித்த வைத்திய கலாநிதி)

பொன் போலும் மேனியது பொலிவும் என்றும்
பொலிவழியா இளமுறுவல் பூக்கும் வாயும்
என்புருகப் பாசத்தால் ஈர்க்கும் நெஞ்சும்
ஏற்றமாரி கவித்துவமும் தமிழிற் பற்றும்
இன்றெங்கள் இடையில்லை அழவே வைத்தீர்
எங்களைவிட்டேகினீரைந் தாண்டின் முன்னர்
கன்றுகள் தாய்ப்பசுவைநினைந் தரற்றப்போலக்
கணேசரே உமை நினைந் தரற்றுவோமே!

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

இல. 156, பிறவுண் வீதி,
1 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

(71035)

## கலந்துரையாடல்

நெல்லியடி, நவ. 18

வடமராட்சி தெற்கு மேற்கு சனசமூக நிலையங்களின் சமாச உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் 20 ஆம் திகதி மாலை 4.00 மணிக்கு கரணவாய், பொன்னம்பல வித்தியாலயத்தில் சமாசத் தலைவர் கொ. குணசிங்கம் தலைமையில் நடைபெறும்.

(க-3-109)

## பனம் பற்பசை அறிமுக விழா

சுதுமலை, நவ. 18

பனை அபிவிருத்தி சபையினால் பனம் பழத்தில் இருந்து தயாரிக்கப்பட்ட 'பாமி' பற்பசையின் அறிமுக விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கண்டி வீதியில் அமைந்துள்ள பனை அபிவிருத்திச் சபையின் தலைமை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

(க-139

## பயிற்சிநெறி

யாழ்ப்பாணம், நவ 18

சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சிநெறி எதிர்வரும் 21 ஆம் திகதி பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெறும்.

'யுனிசெவ்' உதவியுடன் யாழ். மாவட்ட செயலகம் மற்றும் பிராந்திய உள்ளூராட்சித் திணைக்களம் ஆகியன இணைந்து நடத்தும் இந்தப் பயிற்சிநெறியில் 50 பேர் கலந்துகொள்கின்றனர்.

(இ-10)

## மருந்துத் தட்டுப்பாடு

தென்மராட்சி, நவ.18

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவில் அத்தியாவசியமான மருந்து வகைகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதால் தனியார் மருந்தகங்களில் அவற்றினைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

பென்சிலின் ஊசி மருந்து, குழந்தைகளுக்கு கொடுக்கப்படும் 'சிரப்' மருந்து உட்பட மேலும் சில மருந்து வகைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

(இ-117)

## விவசாயக்குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம், நவ. 18

மாவட்ட விவசாயக்குழுக் கூட்டம் எதிர்வரும் 25 ஆம் திகதி வியாழக்கிழமை பி. ப. 2.00 மணிக்கு யாழ். செயலகத்தில் அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் தலைமையில் நடைபெறும்.

(ஐ-3-5)

## நெற் பயிர்களில் புழுத்தாக்கம்

அளவெட்டி, நவ. 18

கந்தரோடை, உடுவில் ஆகிய பகுதிகளில் உள்ள நெற்பயிர்களில் காவோலைப் புழுவின் தாக்கம் அதிகரித்துள்ளதாகத் தெரிய வருகின்றது.

நெல் நடுகை செய்யப்பட்டும், விதைக்கப்பட்டும் சிறு பயிர்களாக இருப்பதனால் காவோலைப் புழுவின் தாக்கத்தினால் நெல் விளைச்சலில் கடும் பாதிப்பு ஏற்படும் என அஞ்சப்படுகிறது.

(க-13)

# செய்திக் கொத்து

### கடனுதவி இல்லை

புன்னாலைக்கட்டுவன், நவ. 18

புன்னாலைக்கட்டுவன் தெற்கு விவசாய சம்மேளனத்தால் அப்பகுதி விவசாயிகளுக்கு வழங்கப்படும் கடனுதவி இந்த வருடம் வழங்கப்படமாட்டாது என சம்மேளனத் தலைவர் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் வாங்கிய கடனை விவசாயிகள் எவரும் திருப்பிச் செலுத்தாத காரணத்தாலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-133)

### பழக்கன்றுகள் வழங்கல்

சுழிபுரம், நவ. 18

பண்ணாகம் கிராமத்தில் ஐந்து வகையான பழ வகைக் கன்றுகள் வலி. மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு அதிகாரியால் பண்ணாகம் மாதர் அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் வைத்து வழங்கப்பட்டன.

(க-28)

### நிதி ஒதுக்கீடு

வளலாய், நவ.18

வலி. கிழக்குப் பிரதேச சபையினால் இதுவரை காலமும் செய்யப்படாதிருந்த பதின்நான்கு வேலைத்திட்டங்களுக்கு பிரமாண அடிப்படையிலான மூலதன நிதியில் இருந்து 6 லட்சத்து 75 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

(க-178)

### கல்லூரிக்கு நிதி அன்பளிப்பு

தென்மராட்சி, நவ. 18

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி புலமைப் பரிசில் நிதியத்திற்கு அவுஸ்திரேலியாவில் வதியும் இக்கல்லூரியின் பழைய மாணவி ஒருவர் 50 ஆயிரம் ரூபாவினை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

இக் கல்லூரியின் முன்னாள் அதிபர் கே. எஸ் சரவணமுத்துவின் நினைவாக திருமதி சத்தியவதி எமேர்சன் என்பவரே நிதியை வழங்கியுள்ளார் என்று கல்லூரி அதிபர் மு. நாகேந்திரராசா தெரிவித்தார்.

(ஐ-117)

### போட்டோஸ்ரட் இயந்திரம் கொள்வனவு

வலி.தென்மேற்கு, நவ.18

வலி.தென்மேற்குபிரதேச சபைக்கு 'கனொன்' போட்டோ ஸ்ரட் இயந்திரம் ஒன்று வந்து சேர்ந்துள்ளது.

கொழும்பில் இருந்து கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டிருந்த இந்த இயந்திரம் ஒரு லட்சத்து 40 ஆயிரம் ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

(க-185)

### விவரங்களைத் திரட்ட உத்தரவு

வலி. கிழக்கு, நவ. 18

யாழ். மாவட்டத்தில் மின்சாரம் வழங்கப்படாதுள்ள கிராமங்களின் விவரங்களை உடன் திரட்டுமாறு சகல பிரதேச சபைகளுக்கும் உள்ளூராட்சி ஆணையாளர் அறிவித்துள்ளார்.

தற்போது வழங்கப்பட்டு வரும் மின் விநியோகத்தினை மேலும் விரிவுபடுத்தி கிராமங்கள் ரீதியாக வழங்க வசதியாகவே இந்த விவரங்கள் திரட்டும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

(க-180)

### பாம்பு தீண்டியது

வேலணை, நவ. 18

பனை மட்டை வெட்டச் சென்றவர் பாம்புக் கடிக்கு இலக்காகி யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் வேலணை மேற்கு 6 ஆம் வட்டாரத்தில் இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த அரசரெத்தினம் என்பவரே பாம்புக் கடிக்கு இலக்காகியவராவார்.

(ஐ-167)

### அங்குரார்ப்பணம்

பளைப்பிரதேச முதியோர் சம்மேளனம் என்ற அமைப்பு அண்மையில் பளைப் பிரதேச செயலகத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. பிரதேச செயலர் சு. புத்திசிகாமணி தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் பெருமளவு முதியோர் கலந்துகொண்டனர்.

(க-117)

### ஆஞ்சநேயர் விக்கிரகம்

மருதனார்மடப் பகுதியில் பிரமாண்டமான ஸ்ரீ. சுந்தர ஆஞ்சநேயர் ஆலயம் அமைக்கப்பட்டு வருகின்றது.

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக் குருக்கள் ஆலயம் அமைக்கும்பணியை மேற்கொண்டுள்ளார்.

அடுத்த ஆண்டில் மேற்படி ஆலயத்திற்கு இந்தியாவில் இருந்து (மாபல்லபுரம்) 9 அடி உயரமான ஆஞ்சநேயர் விக்கிரகம் கப்பல் மூலம் எடுத்துவரப்படவுள்ளது.

(க-185)

### நாய்கள் அழிப்பு

கொக்குவில், கோண்டாவில் பகுதிகளில் கட்டாக்காலி நாய்கள் சென்ற வாரம் அப்பகுதி சுகாதார பரிசோதகர்களினால் நஞ்சூட்டி அழிக்கப்பட்டன

### தளபாடங்கள் கொள்வனவு

வலி. கிழக்கு, நவ. 18

வலி. கிழக்குப் பிரதேச சபைக்கு உட்பட்ட தாய், சேய்நலன்பரிபாலன நிலையங்களுக்கு இவ்வாண்டு அரசினால் வழங்கப்பட்ட நன்கொடைப்பணம் 50 ஆயிரம் ரூபாவில் அந்த நிலையங்களுக்கான தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

இப் பிரதேச சபைப் பிரிவில் ஐந்து தாய்சேய் நலன் பரிபாலன நிலையங்கள் இயங்கி வருகின்றன.

(க-180)

### அடிக்கல் நடும் வைபவம்

புன்னாலைக்கட்டுவன், நவ, 18

புன்னாலைக்கட்டுவன் மகாவித்தியாலயத்தில் புதிய கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல் நடும் வைபவம் அண்மையில் இடம்பெற்றது.

உடுவில் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் அ. தற்பரானந்தன் அடிக்கல்லை நட்டு வைத்தார்.

(க-133)

### பொதுப் பரீட்சை

கொழும்புத்துறை, நவ.18

சரசாலை இந்து மன்றத்தினர் இந்து அறநெறிப் பாடசாலை மாணவர்களிடையே பொதுப் பரீட்சை ஒன்றை அடுத்த மாத இறுதியில் நடத்தவுள்ளனர் என்று அந்த மன்றத்தின் செயலர் க. சிவசங்கரநாதன் தெரிவித்துள்ளார்.

(க-8-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரும்பசிட்டி சன்மார்க்க சபை

## திருவாசக விழா

◆◆◆◆◆◆◆***◆◆◆◆◆◆◆

இணுவில் கிழக்கு அம்மா அச்சக அருகில்
21-11-99 ஞாயிறு காலை 9. 30 மணிக்கு
சைவப்புலவர் சு. செல்லத்துரை
தலைமையில் விழா நடைபெறும்.

சிறப்புரைகள்:

() 'திருவாசகத்தில் அன்பு'
திருமதி நா. செல்வநாயகம் அவர்கள்
(முதுநிலை விரிவுரையாளர், இந்து நாரிகம்; தலைவர், நுண்கலைத்துறை, யாழ். பல்கலைக்கழகம்.)

() 'அல்லல் அறுத்து ஆனந்தமாகிட'
பண்டிதை பொன். பாக்கியம் அவர்கள்

கலை நிகழ்ச்சிகள்:
1 ''தெய்வீகக் கலை'', ''தாளக்காவடி''
நெறியாள்கை: ஏ. அஜந்தன்
2 நாடக வாசிப்பு, மயில் ஆடல் பாடல், விரவிய நாடகம்.
நயவுரை

பொன். மாலகுமார்
பொதுச் செயலர்.

[71043]



ஓய்வு பெற்ற பலாலி ஆசிரிய கலாசாலை
அதிபர்
கவிஞர் திரு. சோ. பத்மநாதன்
அவர்களின்

## மணி விழாவும்
## சேவைநலன் பாராட்டு விழாவும்

இடம்; கலாசாலை சுப்பிரமணியம் மண்டபம்.
காலம்: 19-11-1999 வெள்ளிக்கிழமை
நேரம்: காலை 9 மணி (நியமநேரம்)
தலைவர்: திரு. ச. லலீசன்
(தலைவர், ஆசிரிய மாணவர் மன்றம்)

நிகழ்ச்சிகள்

★ திருநெல்வேலி அரசடி அம்மன் ஆலயத்திலிருந்து விழா நாயகரை அழைத்து வரல்.
★ மங்கள விளக்கேற்றல் ★ இறைவணக்கம்
★ தலைமையுரை
★ வரவேற்புரை: திருமதி வளர்மதி சோமசேகரம்
★ ஆசியுரைகள்: கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி
வண. பிதா ஆர். சீ.எக்ஸ். நேசராஜா
(இயக்குநர், மறைக்கல்வி நடுநிலையம்)
★ தொடக்கவுரை: திரு. கு. சதாசிவமூர்த்தி (அதிபர்)
★ வாழ்த்துரைகள்: பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
(துணைவேந்தர், யாழ் பல்கலைக்கழகம்)
பேராசிரியர் நா. சுப்பிரமணியம்
(தமிழ்த்துறை, யாழ். பல்கலைக்கழகம்)
பண்டிதர் க. சச்சிதானந்தம்
(இளைப்பாறிய உபஅதிபர், பலாலி ஆசிரிய கலாசாலை)
திரு. து. வைத்திலிங்கம்
(மேலதிக அரசாங்க அதிபர் யாழ்ப்பாணம்)
திரு மு. பரஞ்சோதி
(அதிபர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை)
திருமதி கோகிலா மகேந்திரன்
(உதவிக் கல்விப்பணிப்பாளர், வலிகாமம் கல்வி வலயம்)
வித்துவான் க. சொக்கலிங்கம்
★ பாராட்டுரைகள்: திரு. ஆ. மகாதேவன்
(சிரேஷ்ட விரிவுரையாளர்)
திரு. சி. பார்த்தீபன் (அலுவலர்)
திரு. ஐ. தயாபரன் (பழைய மாணவர்)
திரு. ஈ. ஜெ. லெஸ்லி
(கலாசாலை மாணவர்)
★ விழா நாயகரைக் கௌரவித்தல்:
★ ஏற்புரை: கவிஞர் திரு. சோ. பத்மநாதன்
★ கலை நிகழ்ச்சிகள்:
கவியரங்கம் - ''குரு வடிவாய் வந்து...''
★ தலைவர்: கவிஞர் கலாநிதி இ. முருகையன்
பங்குபற்றும் கவிஞர்கள்:
கவிஞர் சு. ஸ்ரீகுமரன்
மதுரகவி காரை. எம். பி. அருளானந்தம்
கவிஞர் கலாநிதி காரை. செ. சுந்தரம்பிள்ளை
கவிஞர் த. ஜெயசீலன்
வில்லிசை- ''சகலகலா வல்லவர்''
வழங்குவோர்: கலாசாலை வில்லிசைக் குழுவினர்
★ நன்றியுரை: திரு. சை. கிறிஸ்ரியன்
(செயலாளர், ஆசிரிய மாணவர் மன்றம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- ஆசிரிய மாணவர் மன்றம்.

பலாலி ஆசிரிய கலாசாலை,
திருநெல்வேலி.

[71028]


## விளக்கமறியலில் வைக்க உத்தரவு

நெல்லியடி, நவ. 18

கோயிலுக்குச் சென்ற இரு யுவதிகளை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதாக சந்தேகத்தின் பேரில் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டகாவலாளி ஒருவர் உட்பட நால்வரையும் இம் மாதம் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிவான் இ. த. விக்னராஜா உத்தரவிட்டார்.

கடந்த தீபாவளித் தினத்தன்று வடமராட்சியிலுள்ள ஆத்தியடிப் பகுதியில் இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பாக, பருத்தித்துறைப் பொலீஸார் சந்தேக நபர்களைக் கடந்த 12 ஆம் திகதி கைது செய்திருந்தனர். [இ-3-109]

## நெற்செய்கைக்கு கடன் உதவி

தென்மராட்சி, நவ. 18

எழுதுமட்டுவாழ் தெற்கு விவசாய சம்மேளனம் இலங்கை வங்கியின் உதவியுடன் இவ்வருட காலபோக நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள ஐம்பது விவசாயிகளுக்கு கடன் உதவி வழங்கவுள்ளது.

கடந்த வருடம் நெற்செய்கைக்காகக் கடன்பெற்று திருப்பிச் செலுத்தியவர்களுக்கே இவ்வருடம் கடன் வழங்கப்படும் என்று சம்மேளனத் தலைவர் இ. தெய்வேந்திரம்பிள்ளை தெரிவித்துள்ளார். (க-8-17)

## கலை விழா

கொழும்புத்துறை, நவ. 18

யாழ். பாலர் கல்விக் கழகத்தின் நிர்வாகத்தில் இயங்கும் 16 பாலர் பாடசாலைகளின் 33 ஆவது வருடாந்தக் கலைவிழா எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8-30 மணிக்கு யாழ். வைத்தீஸ்வராக்கல்லூரியின்சுவாமி விவேகானந்தர் மண்டபத்தில் நடைபெறும்.

கழகத்தின் தலைவர் இ. தவகோபால் தலைமையில் நடைபெற உள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக எம். ரி. பொன்னுத்துரை கலந்து கொள்வார்.

யாழ். மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட பாலர்களின் கலை நிகழ்ச்சிகளும் இந்த விழாவில் நடைபெற உள்ளன. (க-8-30)

★ ★ ★

சாவகச்சேரி, நவ 18

சாவகச்சேரி மகளிர் கல்லூரி ஆரம்பப் பிரிவு மாணவர்களின் கலைவிழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1-30மணிக்கு பாடசாலை மண்டபத்தில் கல்லூரி அதிபர் செல்வி கி. வீரசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ. கணேசனும், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் தி. ஸ்ரீஸ்கந்தராசாவும் கலந்து கொள்வர்.

ஆரம்பப் பிரிவு மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (க-31)

## மாணவன் காயம்

வலி. வடக்கு, நவ. 18

பஸ் தரிப்பிடத்தில் இருந்து பஸ்ஸில் ஏறிய சிறுவன் தவறி விழுந்து காயமடைந்தார்.

கோண்டாவில் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி 3 ஆம் ஆண்டு மாணவனான கோண்டாவிலைச் சேர்ந்த ஹரிமுகன் தயாளன் (வயது8) என்பவரே காயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் [illegible] ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார். (இ-86-15)


## நிமலனடி நிறைந்த 31 ஆம் நாள் நினைவு



அமரர்
முத்துக்குமாரு தர்மலிங்கம்

மண்ணுலக மலர்வு 16-01-1916
விண்ணுலக விரைவு 19-10-1999

சைவமும் தமிழும் சார்ந்த பேர் அராலியின்
எம் தவப்பயனாய் தழைத்திட்ட தருமர்
எண்டிசை போற்ற இன்முகத்தோடும்
இரவலர்க் கீய்ந்தும் புகழ் நிதம் பரப்பி
கண்ணின் மணியாய் கவினுற வாழ்ந்த
சொல்லற்கரிய அடையாக் கதவினன்
எண்குண வள்ளல் இறையடி மேவி
பேரின்பத்தைப் பெட்புற மேவினானே!

மக்கள், மருமக்கள்,
பேரமக்கள், பேரப்பிள்ளைகள்.

இல. 11, ஐந்து சந்தி.
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(71002)



## 31 ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



திருமதி ஆனந்தராசா நிரோஜினி
(வவா)

மண்ணுலகில்: 01 - 06 - 1960
விண்ணுலகில் 19 - 10 - 1999

19-10-99 இல் சிவபதமடைந்த எமது பாசமிகு குடும்பத்தலைவியின் மரணச் செய்தி கேட்டு எமது இல்லத்துக்கு வருகை தந்து அனுதாபம் தெரிவித்து ஆறுதல் கூறியோருக்கும், தொலைபேசி மூலமும், கடித மூலமும் அனுதாபம் தெரிவித்தோருக்கும், அவர் நோய்வாய்ப்பட்டிருக்கும் போது பலவழிகளிலும் உதவி செய்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமத இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இன்று (18-11-99) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கணவன், மகன், தந்தை,
சகோதரர்கள்.

வேம்பன் ஒழுங்கை,
உரும்பராய்.

(71048)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# உதயன்

## கைது தொடர்வது ஊர்ஜிதம்!

கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் இரண்டு தினங்களில் 315 தமிழர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். அவர்களில் பதினைந்து பேர் தவிர்ந்த ஏனையோர்விடுவிக்கப்பட்டனர். என்று உயர்தர பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார். இந்த மாதத்தில்—கடந்த பதினைந்து நாள்களில் — மட்டும் 1,500 தமிழர்கள் கைது செய்யப்பட்டனர் என்ற தகவலையும் அதே அதிகாரி வெளியிட்டிருக்கிறார்.

கொழும்பிலும் அதன் புறநகரங்களிலும் வாழும் தமிழர்களைக் கைது செய்வதன் மூலம் பல தகவல்களைப் பெற முடிகிறதென்று அந்த உயர் அதிகாரி திருப்தி தெரிவித்திருப்பது இங்கு கவனிக்கப்படவேண்டிய ஒன்றாகும். தமிழர்களுக்குக் கொடுக்கும் சிரமங்கள், கஷ்டங்கள் மூலம் அரச அதிகாரிகளுக்கு, அவர்களது பணியில் திருப்தி கிடைக்கிறது. பார்த்தீர்களா?

ஆகையால் தெற்கில் வாழும் தமிழர்கள் வகை தொகையின்றிக் கண்டபடி கைது செய்யப்படுவது இப்போதைக்கு நிறுத்தப்படக் கூடிய ஒன்றல்ல என்பது மறைமுகமாகப் புலப்படுத்தப்படுகிறது. இதனையே ஜனாதிபதி சந்திரிகாவும் கடந்த சனிக்கிழமை கொழும்புத் தமிழர்களைச் செய்மதி மூலம் சந்தித்த போது மிக வெளிப்படையாகக் கூறியிருந்தார்!

இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு காணப்படும் வரை கொழும்பில் தமிழர்கள் கைதாவதைத் தடுக்க முடியாது என்று ஜனாதிபதி அப்போது தெரிவித்திருந்தார். கொழும்பு நகருக்குள் ஊடுருவும் விடுதலைப் புலிகளைப் பிடிப்பதற்காகவே தமிழர்களைக் கைது செய்து விசாரிக்க வேண்டி உள்ளதாகவும் அவர் சொன்னார்.

அவரது இந்தப் பதில் ஒருவரைப் பிடிப்பதற்காக ஆயிரம் பேரைக் கைது செய்வதை நியாயப்படுத்துவதாக அமைந்தது. ஏற்கனவே கைது செய்யப்பட்டு சந்தேகத்துக்கு இடமில்லாதவர்கள் என்று விடுவிக்கப்பட்டவர்களும் மீண்டும் கைது செய்யப்படுகிறார்கள். இரவு வேளைகளிலும் தேடுதல் என்ற பெயரில் தமிழர்களின் வீடுகள், அவர்கள் வாடகைக்குக் குடியிருக்கும் வீடுகள் சோதனைக்குள்ளாக்கப்படுகின்றன.

கட்டாக்காலி நாய்களைப் பிடித்துச் செல்வது போல, கொழும்பு வாழ் தமிழர்கள் பொலிஸ் நிலையங்களுக்குப் 'பிடித்துச்' செல்லப்படுகின்றனர். இதனால் எந்த வேளையிலும் தேடுதல் நடத்தப்படலாம் என்ற அச்ச உணர்வுடனேயே கொழும்புத் தமிழர்கள் நித்திரைக்குச் செல்கிறார்கள்.

தமிழர்களைப்பொறுத்தவரையில் மனித வாழ்வில் எந்தத் துறையையும் விட 'பாதுகாப்புக் காரணத்துக்கே' அரசாங்கம் முதன்மைமுக்கியத்துவம்கொடுக்கின்றது என்பதனை இப்பத்தியில் பல தடவைகள் சுட்டிக் காட்டி இருந்தோம். அதனை ஜனாதிபதியும் தமது செய்மதிச் சந்திப்பின் போது ஊர்ஜிதம் செய்திருக்கிறார்.

நிலைமை இந்தளவுக்கு வந்திருப்பதால், எந்தக் குழுவை நியமித்தாலும், அதற்கு யார் தலைவராக இருப்பினும், எந்தளவு அதிகாரம் வழங்கப்பட்டாலும், கொழும்புவாழ் தமிழர்கள் கண்டபடி கைதாவது ஒரு போதும் நிறுத்தப்படப்போவதில்லை என்பது மட்டும நிச்சயம்.

## வல்வையில் 50 பேருக்கு சுயதொழில் வாய்ப்புக்கடன்

நெல்லியடி, நவ. 18

அகதிகளுக்கான ஐ நா. தூதரகம்,வல்வெட்டித்துறை ஆதிகோயிலடிப் பகுதியில் சுமார் 50 பேருக்கு சுய தொழில் வாய்ப்புக் கடனாக 5 லட்சம் ரூபாவை வழங்கியுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர், இக்கடன் வழங்குப் வைபவம் பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ. சிவசுவாமி தலைமையில் நடைபெற்றது.

அகதிகளுக்கான ஐ. நா தூதரக திட்ட அதிகாரி கே. பாலகிருஷ்ணன், பருத்தித்துறை பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் என். மகேந்திரன் மற்றும் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்,கிராம சேவை அலுவலர்கள் உட்பட பலர் இதில் கலந்து கொண்டனர்.

வறுமைக் கோட்டின் கீழ் உள்ளவர்களுக்கும், விதவைப் பெண்களுக்குமே தலா 10 ஆயிரம் ரூபா வீதம் கடன் வழங்கப்பட்டது.

(இ - 3 - 109)

## மாணவர் சஞ்சிகை கையெழுத்துப் போட்டி

வலிகாமம் தெற்கு, நவ.18

உடுவில், தெல்லிப்பழை, சண்டிலிப்பாய், சங்கானைக் கோட்ட பாடசாலைகளுக்கிடையே வலய மட்டத்தில் நடைபெற்ற மாணவர் சஞ்சிகை கையெழுத்துப்போட்டியில் பின்வரும் பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

★ பாலர் கீழ்ப்பிரிவு:- 1. மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம் (ஒளிச்சுடர்) 2. மானிப்பாய் சோதி வேம்படி வித்தி (சாரளம்)3. கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை(சூரியகாந்தி)

★ பாலர் மேற்பிரிவு:- 1. சித்தங்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலயம் (சிறுவர் விருந்து) 2. உடுவில் அமெ. மி.த.க. பாடசாலை(சிறுவர் அமுதம்) 3. மல்லாகம் விசாலாட்சி வித்தி. (மாணவர் மஞ்சரி).

★ கனிஷ்ட இடை நிலை பிரிவு i:- 1. கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலை(வளர்பிறை) 2. சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி (தேடல்) 3. சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயம் (அறிவரும்பு).

★ கனிஷ்ட இடை நிலைப் பிரிவு ii:- 1. கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலை (வானம் பாடி) 2. மானிப்பாய் மகளிர் கல்லூரி (தமிழ் அருவி) 3 சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயம் (சுடர் ஒளி).

★ கனிஷ்ட இடை நிலைப் பிரிவு iii :- 1. வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி (முத்துச் சிப்பி) 2. இணுவில் மத்திய கல்லூரி (இணுவை வசந்தம்) 3. கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலை(தளிர்).

★ கல்லூரி நிலைத் தெரிவு: 1. மானிப்பாய் மெமோறியல் மகா வித்தியாலயம் (தேடல்) 2. மானிப்பாய் மகளிர் கல்லூரி (தீபம்) 3. தெல்லிப்பழை யூனியன் கல்லூரி(சங்கநாதம்)

(இ-152)

## போஷாக்கு 'விழிப்புணர்வுக்கு பாடசாலை மட்டத்தில் போட்டி

புன்னாலைக்கட்டுவன், நவ. 18

தென்மராட்சிக் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களிடையே போஷாக்கு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் போஷாக்குத் தொடர்பான சுவரொட்டி, கட்டுரை, ஓவியப் போட்டிகள் அடுத்த மாதம் முதலாம், இரண்டாம் திகதிகளில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

ஓவியப் போட்டி மூன்று பிரிவுகளாகவும், கட்டுரைப் போட்டி ஐந்து பிரிவுகளாகவும் நடைபெறும்.

(இ-8-133)

## பேச்சுப் போட்டி

யாழ்ப்பாணம். நவ. 18

கொக்குவில் லயன்ஸ் சழக ஏற்பாட்டில் யாழ். மாவட்ட ரீதியில் பாடசாலைகளுக்கு இடையேயான பேச்சுப் போட்டி கடந்த 11 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

8 பாடசாலைகள் பங்கு பற்றிய இந்தப் போட்டியில முதலாம் இடத்தை பா.பாலகோபியும் (யாழ். இந்து) இரண்டாம் இடத்தை நா. சுகந்தியும் (கொக்குவில்இந்து) மூன்றாம் இடத்தை இ. சர்வேஸ்வரனும் (யாழ். இந்து) பெற்றனர்.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக லயன்ஸ் கழகத்தின் பிராந்தியத் தலைவர் எஸ். பத்மநாதன்கலந்து கொண்டார்.

[இ-4]

## அலுவலகத் திறப்புவிழா

சண்டிலிப்பாய், நவ. 18

மாதகல் தெற்கு கிராம அபிவிருத்திச் சங்க அலுவலகத் திறப்பு விழாவும், சங்கப்பெயர் பலகை திரை நீக்கமும், எதிர் வரும் 21 ஆம் திகதி காலை 9. 30 மணிக்கு நடைபெறவுள்ளது.

சங்கத் தலைவர் பொ. சோமசுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவில் பிரதம அதிதியாக சங்கானை பிரதேச செயலரும், சண்டிலிப்பாய் பதில் பிரதேச செயலருமான கா. சந்திரராசா கலந்துகொண்டு புதிய அலுவலகத்தை திறந்து வைப்பார்.

சிறப்பு விருந்தினர்களாக சண்டிலிப்பாய் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் வி. கனகரத்தினம், சண்டிலிப்பாய் பிரிவுகிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் க. ஸ்ரீபதி ஆகியோர் கலந்து கொள்வர்

[க-135]

## நாளை

கார்த்திகை 3

வெள்ளிக்கிழமை

திதி: ஏகாதசி

முன்னிரவு 8.51 வரை;

நட்சத்திரம்: உத்தரட்டாதி

நள்ளிரவு 12.17 வரை.

சுபநேரம்: 6.09 — 7.39

ராகுகாலம்: 10.39—12.09

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

ஆயிரம் வீண் வார்த்தைகளை விட, கேட்பவர்களுக்கு இதமளிக்கும் ஒரு நல்ல வார்த்தை மேலானது.

கௌதமபுத்தர்

## கூட்டுறவு உயர் கல்லூரியை புனரமைக்க நிதி ஒதுக்கீடு

வலி. வடக்கு, நவ 18

யாழ். மாவட்ட பிராந்திய கூட்டுறவுக் கல்லூரி சுமார் 5 லட்சம் ரூபா செலவில் திருத்தி அமைக்கப்படவுள்ளது.

கடந்த மாதம் கொழும்பு தேசிய கூட்டுறவுச் சபைக் கூட்டத்தில் இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

வடமாகாண தேசிய கூட்டுறவுச்சபைப் பணிப்பாளரும் தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கத் தலைவருமான சி. சிவமகாராசா அந்தக் கூட்டத்தில் விடுத்த கோரிக்கையைத் தொடர்ந்தே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த கால வன் செயல்கள் காரணமாக பாசையூரில் இயங்கிய இந்தக் கல்லூரி கட்டடங்கள் சேதமடைந்தன என்றும்—

இதன் காரணமாக கூட்டுறவு துறையைச் சேர்ந்தவர்களுக்கு உயர் பயிற்சி அளிக்க முடியாத நிலை நிலவியது என்றும்— தெரிவிக்கப்பட்டது.

(3-86)

## வீடியோக் காட்சி

யாழ்ப்பாணம், நவ. 18

திரைப்படமாக்கப்பட்ட இலக்கியப் படைப்புகள் வரிசையில் உமாச்சந்திரனின் முள்ளும் 'மலரும் வீடியோ' படக்காட்சி நாளை மறுதினம் (சனி) காலை 10 மணிக்கு யாழ். பல்கலைக் கழக புவியியற்றுறை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

ஆர்வலர்கள் இந்தத்திரைப் படத்தைப் பார்வையிடலாம் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

(3-5)

## பயணப் பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டோரின் விவரம்

யாழ்ப்பாணம், நவ. 18

யாழ். குடாநாட்டில் இருந்து வெளி இடங்களுக்கு பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பெயர் விவரங்கள் உதயனில் வெளியாகி வருவது தெரிந்ததே.

பயண அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம் மாதம் 16 ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:—

### சாவகச்சேரி

[124323ஏ], [110553ஏ], [120858ஏ], [120882ஏ], [120882பி], [123291ஏ], [123291பி], [123292ஏ], [123292பி], [126116ஏ], (126125ஏ), (126142ஏ), (126153ஏ), (126160ஏ), (126161ஏ), (126166ஏ), [126166பி], [126166சி], [126166டி], [126174ஏ], [126176ஏ], [126176பி], [126177ஏ], (126188ஏ), (126188பி), (126192ஏ) (126192 பி), (126194 ஏ), [126200 ஏ), (126200 பி), [226200 சி),(126200 டி), (126202 ஏ], (126207 ஏ), [126210 ஏ), (126212 ஏ), (126213 ஏ), [126218 ஏ), (126218 பி), (126219 ஏ), (126221 ஏ], (126222ஏ), (126223 ஏ), (126227 ஏ), (126233 ஏ, (123655 ஏ), (123665 ஏ), (123667 ஏ], (123676 ஏ), (123676 பி], (123676 சி), (123681 ஏ),(123681பி), (123683ஏ), (123684 ஏ), [123690ஏ], [126015ஏ], [126015பி], [126015சி], [126017ஏ], [126019ஏ], [126020ஏ], [126020பி], [126020சி], [126020டி], [126020ஈ], [126030ஏ], [126030பி], [126038ஏ], [126038பி], [126046ஏ], [126046பி].

### யாழ்ப்பாணம்

[124325ஏ], [116171ஏ], [116171பி], [116171சி], (116171டி], [118224ஏ], [118224பி], [118224சி], [118224டி], [118224ஈ). [118224எவ்], [120447ஏ], [120447பி], [120765ஏ], [120765பி], [120765சி], [122642ஏ], [122673ஏ], [122673பி], [122846ஏ]. (122846பி], [124496ஏ), [124594ஏ], [124594பி], [124751ஏ], [124770ஏ], [124785ஏ], [124790ஏ], (124804ஏ]. (124845ஏ), (124845பி), [124861ஏ), [124900ஏ], [124900பி], [126520ஏ], [126520பி), [126520சி), [126520டி], (126253ஏ), (126523பி), [126524 3சி), [126524ஏ), [126549ஏ], [126561ஏ), [126585ஏ], [126585பி], [126586ஏ], [126588ஏ], [126595ஏ]. [126597ஏ], [126597பி], [126597சி], [126597டி], [126598ஏ], [126599ஏ], [126599பி], [126607ஏ], [126607பி], [126607சி], [126635ஏ], [126635பி], [126652ஏ], [126654ஏ], [126656ஏ], [126659ஏ], [126673ஏ], [126695ஏ], [126696ஏ], [126697ஏ], [126699ஏ], [126709ஏ],

### கரவெட்டி

[124342ஏ], 122279ஏ], [125542ஏ], [125575ஏ], [125575பி], [125613ஏ], [125868ஏ].

### கோப்பாய்

[116764ஏ], [116774ஏ], [116774பி], [116776ஏ], [116776பி], [116780ஏ], [116780பி], [116790ஏ], [116798ஏ], [117596ஏ], [121081ஏ], [121099ஏ], [121099பி], [121150ஏ]. [121162ஏ], [121162பி], [121205ஏ], [121218ஏ], [123156ஏ, [123165ஏ], (123165பி), (123165சி), (123165டி), (123165ஈ), (123165எப்), (123965ஏ), (123965பி). [123976ஏ], [123972ஏ], [123977ஏ. [123977பி], [123979ஏ], [123986ஏ], [123996ஏ], [124006ஏ], [124006பி], [124009ஏ], [124124ஏ], [124124பி], [124124சி], [124129ஏ], [124129பி].

### மருதங்கேணி

[116470ஏ], [116470பி], [123700ஏ], [123711ஏ], [123711பி], [123711சி], [125461ஏ], [125461பி], [125473ஏ], [125473பி], [125473சி].

### நல்லூர்

[104388ஏ], [117546ஏ], [117583ஏ], [117591ஏ], [117603ஏ], [117658ஏ], [117666ஏ], [123120ஏ], [123120பி], [123120சி], [124290ஏ], [124297ஏ], [124298ஏ], [124299ஏ], [124300ஏ], [124312ஏ], [124316ஏ], [124317ஏ], [124324ஏ], [124339ஏ]. (124367ஏ), (124368ஏ), (124396ஏ), (124397ஏ), (124404ஏ), (126577ஏ), (126577பி),

### பளை

(116442ஏ), (125465ஏ), (125465பி), (125466ஏ), (125470ஏ), (125474ஏ). (125474பி),

### பருத்தித்துறை

[122175 ஏ], [122175பி], [122175 சி], [122175 டி], (122258 ஏ].

### உடுவில்

[121056ஏ], (123892 ஏ), (123892 பி), [123892 சி), [123903 ஏ], (124903 பி), (123906 ஏ), (123906 பி), (123909 ஏ), (127488 ஏ), (127488 பி).

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

மிருசுவில் வடக்கு, மிருசுவிலைச் சேர்ந்த கிருஷ்ணசாமி குகதாசன் என்பவருடைய தேசிய அ. அ. (இல. 790924100 V) யும், விசேட அ. அ. (இல. 091045530) யும் 07-11-99 அன்று தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் இல. 70, இராமநாதன் வீதியிலுள்ள, கண்ணன் குளிர் அருவியில் தயவு செய்து ஒப்படைத்து உதவவும்.
[சி/9871]

### வீடு விற்பனைக்கு

பருத்தித்துறை வீதி, நுணாவில் சந்தியில் 2½ பரப்புக் காணியுடன் சகல வசதிகளுடன், நல்ல நிலையில் உள்ள வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: ச. நடேசபிள்ளை, ஓய்வு பெற்ற அதிபர், நுணாவில் மேற்கு, சாவகச்சேரி. [71026]

### தேவை

Broiler இறைச்சிக் கோழிகள் தேவை. தொடர்புகளுக்கு:- இல. 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர்.
[71020]

## கைதான ஐவர் விடுவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 18

கடந்த வாரம் மானிப்பாய், உடுவில், உரும்பிராய் ஆகிய பகுதிகளில் வைத்து சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட ஐந்து இளைஞர்கள் விசாரணைகளின் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

லோகநாதன் மோகனதாஸ் [மானிப்பாய்], தெய்வேந்திரன் தயாளன் (உரும்பிராய்), ஜேசுதாசன் கிறிசியன்சா (உரும்பிராய்), செல்வராசா றொபின் கார்ட் (உரும்பிராய்), பொன்னுத்துரை கௌரிதாசன் [உடுவில்), ஆகியோரே விடுவிக்கப்பட்டவர்கள் ஆவர்.

இவர்கள் விடுவிக்கப்பட்டமை தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு படையினரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3-5)

## மானிப்பாயில் பங்கீட்டுக்குப் பொருள்கள்

சுதுமலை, நவ. 18

மானிப்பாய் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் குடும்ப அட்டைக்கு 2 லீற்றர் மண்எண்ணெய் விநியோகம் செய்யப்படுகின்றது அத்துடன் அரிசி, சீனி, மா போன்றனவற்றையும் பங்கீட்டு அட்டைக்கு விநியோகிக்கப்படுகின்றன.

(இ-139)

## கற்கை நெறி

யாழ்ப்பாணம், நவ. 18

புறநிலைப் படிப்புகள் அலகினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஈழத்துத்தமிழ்இலக்கிய அடிப்படைக் கற்கைநெறி நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக் கழகத்தில் ஆரம்பமாகவுள்ளது.

எனவே இலக்கிய ஆர்வலர்கள், உயர்தரவகுப்பில் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்கள் மற்றும் பட்டப்படிப்பு மாணவர்கள் மற்றும் ஆர்வமுள்ளோர் நாளை 12 மணிக்கு முன்பாக புறநிலைப் படிப்புகள் அலகு அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு அலகின் இணைப்பாளர் கேட்டுள்ளார். (இ-10)


## BEACON DEGREE HALL

B.A. Part I

ஆரம்பம்: 21 - 11 - 99 (ஞாயிறு) காலை 9 மணி

முக்கிய குறிப்பு:

G.A.Q 2000 Ist in Com. நடைபெறுகின்றது.

– நிர்வாகி

(71029)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

பெற்ற நாடும் பிறந்த நற்தேசமும்
பெருமை கொள்ள

லயன் வைத்திய கலாநிதி

எஸ். எஸ். அருளானந்தம்

அவர்கள் அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமனம் பெற்றதையிட்டுப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

எஸ். சின்னத்தம்பி,
எஸ். இளம்பிறைநாதன் குடும்பம்,
(கொழும்பு).
எஸ் பொற்கிளி.

(சி/9873)



## திறப்பு விழா

★★★★★★★★★

U.N.D.P.-S.L.R.C.S. (J/B) இன்
இளைஞர் யுவதிகளுக்கான
வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழமைந்த

VATHIRY CRAFT

பாதணி உற்பத்தி நிலையத்தின்
மொத்த, சில்லறை விற்பனை நிலையம்

காலம்: 18--11--1999 வியாழன்

இடம்: இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
யாழ். கிளையின் காரியாலயம்


கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

தரமான பொருள்கள் மலிவான விற்பனை

''நாம் என்றும் உங்களோடு''

(71053)


## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 31 – 12 – 1919 | 16 – 11 – 1995 |

அமரர் சுப்பையா மாணிக்கம்

முன்னாள் உதவிப் பொலிஸ் அதிபர்
(Retired Asst Superintendent of Police)

திதி: 18 –11 – 99

பண்பு, அன்பு, நேர்மைக்கு உறைவிடமாய்த் திகழ்ந்து குடும்பத்தின் குலவிளக்காய்த் திகழ்ந்து மறைந்த எங்கள் அன்புத் தெய்வம்

ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

79/2, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி.

(71018)

## கண் பரிசோதனை

யாழ்ப்பாணம், நவ. 18

மானிப்பாய் வட்டத்தைச் சேர்ந்த சுன்னாகம் மற்றும் உரும்பிராய் லயன்ஸ் கழகங்கள் இணைந்து நடத்தும் இலவச கண்பரிசோதனை முகாம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இணுவிலில் உள்ள விவசாய பயிற்சிக் கல்லூரி மண்டபத்தில் காலை 7 30 மணிக்கு நடைபெறவுள்ளது.

விழி வெண்படலத்தால் பாதிப்படைந்த வசதி குறைந்தவர்களைப் பரிசோதனை செய்து சத்திர சிகிச்சை மேற்கொள்வதற்கான ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளன.

[இ-10]


ALL PURPOSE MULTI DIRECTIONAL

KOBE-52

TV/RADIO ANTENNA



பொருத்துவதற்கு இலகுவானது

- அனைத்து தொலைக்காட்சி சேவைகள்
- AM/FM வானொலி அலைகள்
- உட்பொருத்தப்பட்ட பூஸ்டர்
- ஒரு பூஸ்டரிலிருந்து இரண்டு வெளியாக்கிகள்
- பணம் திரும்பத்தரும் உத்தரவாதம்

LANKA NIPPON
18, Keyzer Street, Colombo 11.
Tel: 437735, 324726
Fax: 437736
10, Trelawny Place, (Behind Milk Bar)
Bambalapitiya Junction, Colombo 4. Tel: 589982

(சி/9860)



## புத்தகங்கள்

இறக்குமதி செய்யப்பட்ட பல்துறை புத்தகங்கள்
மிக மலிவு விலையில் விற்றுத் தீர்க்கப்படவுள்ளன.
பார்வையிடுவதற்கு

யாழ். புத்தக நிலையம்,
4, செட்டித்தெரு, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(71046)


## முப்பத்தோராம் நாள் நினைவஞ்சலி

எமது வகுப்பு சக மாணவன்
செல்வன் ஆ. அன்புஜன்
அவர்களின் அன்புத் தாயார்

திருமதி நிரோஜினி ஆனந்தராஜா

அவர்கள் 18 — 10 — 1999 அன்று காலமானார் அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

தரம் 8
ஆசிரியர்கள், மாணவ, மாணவியர்.
பிறைற்றன் கல்வி நிலையம்

உரும்பிராய். (71069)

## 10 ஆம் ஆண்டு கண்ணீர் நினைவலைகள்



| தோற்றம்: | மறைவு |
|---|---|
| 06 – 06 – 1947 | 18 – 11 – 1989 |

அமரர்

செல்லக்குமார் சின்னக்குமாரன்

பாசங்களின் பிறப்பிடமே
பண்பு ஒளிரும் அப்பா நீ
கீதங்களின் இனிமையெல்லாம்
குரலில் தந்த நாதமணி
மேகங்களாய் கண் சொரிய
தேடுகின்றேரம் போனவழி
இறைவனது பாதங்களில் பணிந்திருந்து
வேண்டுகின்றோம் உன் ஆன்ம சாந்தி!

அன்னாரின் பிரிவால் துயருறும்
பெற்றோர், பிள்ளைகள்,
உடன்பிறப்புகள் உறவினர், நண்பர்கள்,

15/1, 2 ஆம் குறுக்கு வீதி,
பாஷையூர்,
யாழ்ப்பாணம்.

(71041)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## வைத்திலிங்கம் கந்தையா

கோப்பாயைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் கந்தையா நேற்று 17-11-99 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் - பொன்னுப்பிள்ளையின் அன்பு மகனும் நாகரத்தினத்தின் அன்புக் கணவரும் உதயகுமார், காலஞ்சென்ற சாந்தன், ஜானகி (கனடா) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் சிவராஜேஸ்வரி, தர்மலிங்கம், ரஞ்சன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் றிஷாந்த். கார்த்திகா, ஜெனனன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள்இன்று (18-11-99) வியாழன் பி.ப.1மணிக்குஅன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக இளங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
நாகரத்தினம் [ மனைவி ]
உதயகுமார் ( மகன் )

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

(சி/9888)

## திருமதி இளையப்பா அன்னப்பிள்ளை

(இளைப்பாறிய ஆசிரியை)

கைதடி, நாவற்குழியைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியை திருமதி இளையப்பா அன்னப்பிள்ளை அவர்கள் நேற்று (17-11-99) சிவபதமடைந்தார்.

அன்னார் இளைப்பாறிய ஆசிரியர் நா. இளையப்பாவின் அன்பு மனைவியும் நிர்மலாதேவி, சபாநாதன் (கிராமசேவையாளர், கைதடி, நாவற்குழி), வைத்திய கலாநிதி உமாமகேஸ்வரி (கனடா), நிரஞ்சனாம்பிகை (முன்னாள் உதவி முகாமையாளர், காப்புறுதிக் கூட்டுத்தாபனம், யாழ்ப்பாணம்-லண்டன்), பிறேமா (கணக்குப் பதிவாளர் பிரதேச செயலகம், பளை), உதயகுமார் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் க நடராசா (ஓய்வு பெற்ற உத்தியோகத்தர், உணவுத் திணைக்களம், யாழ்ப்பாணம்), அ.இ. தர்மரட்ணம் (பொறியியலாளர், கனடா), க. மாணிக்கவாசகர் (விரிவுரையாளர், லண்டன்), இ. இரவீந்திரன் (படவரைஞர், நீர்ப்பாசனத் திணைக்களம், வவுனியா), காலஞ்சென்ற திருமதி ச வசந்தாதேவி (நூலகர், தென்மராட்சி பிரதேச சபை உப அலுவலகம். நாவற்குழி), திருமதி ச. மதிவதனி, திருமதி உ. மனோகரி (முன்னாள் ஆசிரியை - ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஜெயதீபன், யசீதரன், யதுமதி, ஜெயநீதன், மயூரன், மீரா, நிருபன், நிதர்சன், மதுரிகா, தீபிகா, சிந்துசா, மனோதிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18-11-99) வியாழக்கிழமை காலை 11-30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காகத் தனிப்பனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தகவல்:
இ. சபாநாதன் (மகன்)
(கிராமசேவையாளர்)

கைதடி, நாவற்குழி.

(71074)

## செல்வன் சிவநாதன் ரவிசங்கர்

(யா/ஹாட்லிக் கல்லூரி 2000 ஆம் ஆண்டு உ/த உயிரியல்)

கரணவாய் தெற்கு வீரப்பதிராயனைச் சேர்ந்த சிவநாதன் ரவிசங்கர் நேற்று 17 — 11 — 99 புதன்கிழமை அகால மரணமானார்.

அன்னார் சின்னத்துரை சிவநாதன் (முகாமையாளர் இலங்கை வங்கி, நெல்லியடி), சாந்தநாயகி ஆகியோரின் சிரேஷ்ட புதல்வனும் அருணா, சத்தியேந்திரா ஆரணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான சி. விநாயகமூர்த்தி பரமேஸ்வரி வீ. சின்னத்துரை ஆகியோரினதும் திருமதி சி. இலட்சுமி திரு. திருமதி அருளானந்தம் திரு. திருமதி வைரமுத்து ஆகியோரினதும் அன்புப் பேரனும் திரு. திருமதி வீரகத்திப்பிள்ளை (சட்டத்தரணி), திரு. திருமதி மகாகணபதி, வ. உதயசந்திரா, அ. சாந்தி ஆகியோரின் பெறா மகனும் வி. சிவகுமாரன் (ஆசிரியர், கண்டி), குகதாசன், கிருபானந்தன், பாலகிருஷ்ணன், சரவணபவான், பரமேஸ்வரன், கிருஷ்ணேந்திரன், பதஞ்சலி, உதயச்சந்திரன் ஆகியோரினதும் திரு. திருமதி இராமநாதன் திரு. திருமதி நாகேந்திரம், திரு. திருமதி கிருபாகரன் ஆகியோரினதும் அன்பு மருமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 18-11-99 வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
சி. சிவநாதன்
(தந்தை)

வீரப்பதிராயன்,
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.

(சி/9885)

# விளையாட்டரங்கு

## பெப்சிகிண்ணம் இந்திய அணிக்கு!

புதுடில்லி, நவ. 18

இந்திய - நியூஸிலாந்து அணிகளுக்கிடையே நடைபெற்று வந்த பெப்சி கிண்ணத்துக்கான ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் நேற்று புதுடில்லியில் நடைபெற்ற ஐந்தாவதும் இறுதியுமான ஆட்டத்தினை 7 விக்கெட்டுக்களால் வென்றதன் மூலம் இந்திய அணி கிண்ணத்தைக் கைப்பற்றியது. முன்னதாக நடைபெற்ற நான்கு போட்டிகளிலும் இந்திய, நியூஸிலாந்து அணிகள் தலா இரண்டில் வெற்றி பெற்று சமநிலையில் இருந்தமையால் நேற்றைய இந்த ஆட்டமே வெற்றி தோல்வியை நிர்ணயிக்கும் ஆட்டமாக அமைந்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூஸிலாந்து அணித்தலைவர் ஸ்ரீபன் பிளமிங் தமது அணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார்.

களமிறங்கிய நியூஸிலாந்து அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களின் விக்கெட்டுகள் விரைவாக வீழ்ந்தமை நியூஸிலாந்து அணியின் ஓட்டச் சராசரியில் குறைவை ஏற்படுத்தியது-

50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்திருந்த நியூஸிலாந்து அணி 179 ஓட்டங்களை மட்டுமே பெற்றிருந்தது.

அணிக்காக றோஜர் தீவோஸ் 47 ஓட்டங்களையும் கிறிஸ் கெய்யின்ஸ் 41 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்திருந்தனர்.

நியூஸிலாந்து அணியை ஆட்டங்காணச் செய்த இந்திய அணியின் பந்து வீச்சில் புதிய தமிழ்நாட்டு வீரர் திருநாவுக்கரசு குமரன் 3 விக்கெட்டுக்களையும் சௌரவ் கங்குலி, றொபின் சிங், ஜவகர் சிறிநாத், சுனில் ஜோசி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

180 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய இந்திய அணி தனது 117 ஓட்டத்திலேயே தனது முதல் விக்கெட்டை இழந்தது.

தொடர்ந்து துடுப்பாட்டத்தில் இந்திய அணி 3 விக்கெட்டுக்களை இழந்து 44 ஓவர்களிலேயே வெற்றிக்குத் தேவையான ஓட்டங்களைப் பெற்றதன் மூலம் நேற்றைய ஆட்டத்தில் வென்று கிண்ணத்தைத் தனதாக்கியது.

அணியின் வெற்றிக்காக சௌரவ் கங்குலி 12 பவுண்டறிகள், ஒரு சிக்ஸர் அடங்கிய 86 ஓட்டங்களையும் டெவர் காந்தி 30 ஓட்டங்களையும் ராகுல் ட்ராவிட் ஆட்டமிழக்காது 3 பவுண்டறிகள் 2 சிக்ஸர்கள் அடங்கிய 29 ஓட்டங்களையும் பெற்றனர். இந்திய அணியின் அணித்தலைவர் சச்சின் டெண்டுல்கர் ஓட்டமெதுவும் பெறாமல் ஆட்டமிழந்தார்.

நியூஸிலாந்து அணியின் பந்து வீச்சில் டானியல் விற்றோறி 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

நேற்றைய ஆட்டத்தின் ஆட்ட நாயகனாகவும் தொடரின் ஆட்ட நாயகனாகவும் இந்திய அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரர் சௌரவ் கங்குலி அறிவிக்கப்பட்டார்.

நியூஸிலாந்து அணியுடன் நடந்து முடிந்த டெஸ்ட் மற்றும் ஒரு நாள் சர்வதேச தொடர் ஆகியவற்றை இந்திய அணி வென்றது. அணியின் புதிய பயிற்றுவிப்பாளர் கபில் தேவிற்கு பெருமை சேர்ப்பதாக இருந்தது.

(இ-4)

## கூடைப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், நவ. 18

யாழ். ஹட்டன் நஷனல் வங்கி பாடசாலைகள், கழகங்களுக்கிடையே நடத்தும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:

★ மாலை 3 30 மணிக்கு— யாழ் மத்தியகல்லூரி ''ஏ'' அணி எதிர் யாழ்ப்பாணக் கல்லூரி ''பி'' அணி.

★ மாலை 4.30 மணிக்கு— சென். ஜோன்ஸ் ''பி'' அணி எதிர் சென். பற்றிக்ஸ்.

(இ-4)

## மென்பந்து கிரிக்கெட்

யாழ்ப்பாணம், நவ. 18

அரியாலை மத்திஇளைஞர் கழகத்தின் இரண்டாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கழக விளையாட்டு அவை ஏற்பாடு செய்துள்ள 7 பேர் பங்குபற்றும் 12 ஓவர்கள் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் கனகரத்தினம் ம. ம. வி. மைதானத்தில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ மாலை 3 மணிக்கு— விநாயகர் வி, க. 'ஏ' அணி எதிர் செவன் கொய்ன்ட்ஸ் வி. க. அணி.

★ மாலை 4. 30 மணிக்கு —சென்றலைட்ஸ் வி. க. 'புளூஸ்' அணி கலைமகள் வி. க. 'ஏ' அணி.

(இ-4)


## தேவை

தரம் 5, 6, 7 இல்
எல்லாப் பாடங்களுக்கும்
கற்பிப்பதற்கு
**ஆசிரியர்களும்**
நிறுவனத்திற்கு
**CLERK**
உம் தேவை.
(Clerk ஆங்கில, தமிழ் தட்டச்சு வேலைகள் தெரிந்தவர் விரும்பத்தக்கது)
இருபாலாரும்
விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவு திகதி
99 – 11 – 30

– DIRECTOR
**THE ELITE INSTITUTE**
192, KACHCHERI –
NALLUR ROAD JAFFNA.


## கண்ணீர் அஞ்சலி

ஆழ்கடலில் ஆய்வுக்காகச் சென்று அலை அரக்கனால் அள்ளிச் சென்றவேளை தன்னையிழந்த

**செல்வன் சி. ரவிசங்கர்**

அவர்களுக்கு எமது கண்ணீர்ப் பூக்களைச் சமர்ப்பிக்கின்றதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

முருகமூர்த்தி சனசமூக நிலையம்,
கரணவாய் தெற்கு.

(சி/9884)


## நல்லூர் லயன்ஸ்கழகத்தின்

ஆதரவில்

**நீரிழிவு நோய் பற்றிய**
**கருத்தரங்கும் வைத்திய பரிசோதனையும்**
நடைபெறவுள்ளன.

இடம்: யா/கனகரட்னம் ம. ம. வித்தியாலயம்
காலம்: 21–11–1999 ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி

**லயன் Dr. க. பிரதீப்குமார்**
தலைமையில்
Dr. அகிலன், Dr. யோகநாதன்,
மருத்துவபீட மாணவர்களும்
கலந்து கொள்ளுகிறார்கள்.

குறிப்பு: 8, 9, 10, ஆம் மாதங்களில் திருநெல்வேலி கலாமன்றம், இந்து தமிழ்க் கலவன் பாடசாலை, முத்துத்தம்பி வித்தியாசாலையில் இடம்பெற்ற கண்பரிசோதனைகளின் போது சிபார்சு செய்யப்பட்டவர்களுக்கு லயன் E.S P- நாகரத்தினம் M. J.F. அவர்களின் 383, கோயில் வீதி, நல்லூர் இல்லத்தில் 20 – 11 – 1999 சனிக்கிழமை மாலை 3 30 மணிக்கு வைத்து உரிய கண்ணாடிகள் வழங்கப்படும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி!

லயன் வி. எஸ். சொக்கலிங்கம்
செயலாளர்.

லயன் த. சற்குணராசா M. J. F.
தலைவர்.

(சி/9878)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கப்பல்களில் தபால் பொதிகள்

யாழ்ப்பாணம், நவ. 18

நேற்றுக் காங்கேசன் துறைக்கு வந்து சேர்ந்த லங்கா முடித்த மற்றும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுக் கப்பல்கள் மூலம் குடாநாட்டுக்கான வெளியூர்த் தபால்கள் அடங்கிய 414 தபால் பொதிகள் எடுத்து வரப்பட்டுள்ளன.

இவற்றில் 342 பொதிகள் லங்கா முடித்த கப்பல் மூலமும் 72 பொதிகள் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுக் கப்பல் மூலமும் எடுத்து வரப்பட்டுள்ளன.

இதேவேளை—

குடாநாட்டின் பல பகுதிகளிலும் சேகரிக்கப்பட்ட வெளியூர்த் தபால்கள் அடங்கிய 57 தபால் பொதிகள் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு கப்பல் மூலம் திருகோணமலைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன. (இ-9-10)

# இரத்தம் அவசரம் தேவை

யாழ்ப்பாணம், நவ. 18

யாழ். போதனா வைத்திய சாலையின் இரத்த வங்கிக்கு 'ஓ', 'ஏ' நெகடிவ் இரத்த வகைகள் மிக அவசரமாகத் தேவைப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி இரத்த வகையைச் சேர்ந்தோர் ஆஸ்பத்திரியின் இரத்த வங்கியில் இரத்த தானம் செய்து கொள்ளலாம் என இரத்த வங்கியின் மருத்துவ அதிகாரி அறிவித்துள்ளார். (இ-7)


இன்றைய ஓடியோ CD வெளியீடுகள்!

- சுந்தரன் நானும் சுந்தரி நீயும்
- கில்லாடி பாட்டுக்காரன்
- ஆரம்பம் ஆகுது

மூர்த்தி வீடியோ சென்ரர்

மானிப்பாய்

T. P. 2884

[சி/9887]


# கலை விழா

யாழ்ப்பாணம், நவ. 18

சிறுப்பிட்டி முன்பள்ளி மாணவர்களின் வருடாந்த கலைவிழா சிறுப்பிட்டி சன சமூக நிலையத்தின் அனுசரணையுடன் எதிர்வரும் 21 ஆம் திகதி பிற்பகல் ஒரு மணிக்கு சிறுப்பிட்டி இந்து தமிழ்க்கலவன் பாடசாலையில் புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரியில் ஓய்வு பெற்ற அதிபர் வே. சந்திரசேகரம்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரீ. வீ. கிருஷ்ணசாமி பிரதம விருந்தினராகவும் தலைமை அலுவலக சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி த. பாஸ்கரன், வலி. கிழக்கு பிரதேச சபைசெயலர் செ. குகதாசன், சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் செ. தவநாயகம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர். (இ-9)

# கற்கைநெறி ஆரம்ப விழா

யாழ்ப்பாணம், நவ. 18

யாழ். பல்கலைக்கழக புறநிலைப்படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் ஈழத்துத்தமிழ் இலக்கியம் அடிப்படைக் கற்கை நெறியின் ஆரம்ப நிகழ்வு நாளை மறுதினம் காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது.

புறநிலைப்படிப்புகள் அலகின் இணைப்பாளர் பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளையும் சிறப்பு விருந்தினர்களாக பேராசிரியர்நா. சுப்பிரமணிய ஐயர், கலாநிதி எஸ். சிவலிங்கராசா, பேராசிரியர் செ. பாலச்சந்திரன் ஆகியோரும் கலந்து கொள்வர்.

ஒன்றரை மாதம் நடைபெறும்இந்தக்கற்கைநெறிக்கு 50 மாணவர்கள் தற்பொழுது பதிவு செய்துள்ளனர். (-3-5)


NIRU TUITION CENTRE

STATION ROAD, KONDAVIL.

A/L 2000

பௌதிகவியல்

ELECTRONIC

ஆரம்பம்: 19 - 11 - 99

வெள்ளி - 5.00 p.m.

ஆசிரியர்:

T. சம்பந்தன்

(71049

BARATHY சித்தன்கேணி

கணக்கீடு — B. முகுந்தன்

A/L 2000

- பங்குடைமை
- வருமானச் செலவுக்கணக்கு

A/L 2001

- தொங்கல் கணக்கு
- இலாபநட்டக்கணக்கு

[71063]


## கலைப்பீட மாணவர்களுக்கான பொதுக்கூட்டம்

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்கள் அனைவரையும் கைலாசபதி கலையரங்கத்தில் இன்று (18-11-99) காலை 9.30 மணியளவில் கூடுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

கலைப்பீட மாணவர் ஒன்றியம்.

(71077)

# நேர்முகப் பரீட்சை

பதில் கடமை புரியும் உதவிக் கல்விப் பணிப்பாளர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் நாளையும் நாளை மறுதினமும் கொழும்பில் கல்விச் சேவைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் நடைபெறவிருக்கின்றன.

யாழ். மாவட்டத்தில் இருந்து இந்த நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளவர்கள் அடுத்த மாதம் 15 ஆம் திகதி வரை எந்தத் தினத்திலும் நேர்முகப் பரீட்சைக்கு சமுகம் அளிக்கலாம் என்றும்—

போக்குவரத்துப் பிரச்சினை காரணமாக யாழ். மாவட்டத்தில் இருந்து தோற்றுபவர்களுக்கு மட்டும் இந்தச் சலுகை வழங்கப்பட்டுள்ளது என்றும்— வடக்கு - கிழக்கு மாகாண சபை அதிகாரிகள் தெரிவித்தனர். (இ-3-10)

## கல்விச்...

(முதலாம் பக்கத் தொடர்)

வளம் பற்றிய செய்முறைக் கல்வியை வழங்கும் வகையில் தொண்டமனாறு வெளிக்கள நிலையம் வடமராட்சி மாணவர்களுக்கென நேற்றைய தினம் கல்விச்சுற்றுலாஒன்றை ஒழுங்கு செய்திருந்தது.

இந்த வகையில் ஹாட்லிக் கல்லூரி, வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி மற்றும் மெதடிஸ்த உயர்தரப் பெண்கள் பாடசாலை, கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி ஆகியவற்றைச் சேர்ந்த மாணவர் குழு ஒன்று பருத்தித்துறைக் கடற்கரைக்குச் சென்றிருந்தது.

இந்தக் குழுவினர் திக்கத்துக்கும் — இன்பருட்டிக்கும் இடையிலுள்ள கடற்கரையில் அமைக்கப்பட்டிருந்த வான் வாய்க்கால் அருகில் உள்ள கயிறு ஒன்றைப் பிடித்தவாறு சென்ற சமயம் பெரிய அலை ஒன்று இம்மாணவர்கள் மீது வந்து மோதியது எனவும் —

அப்போது மேற்படி குழுவில் அடங்கிய ஏழு மாணவர்கள் கயிற்றின் கை நழுவிய நிலையில் அலையில் இழுத்துச் செல்லப்பட்ட சமயம் இந்த அனர்த்தம் இடம்பெற்றது என்றும் கூறப்படுகிறது.

இந்தச் சம்பவம் பற்றி அறிந்த பருத்தித்துறை இராணுவ முகாம் பொறுப்பதிகாரி இரண்டு டோறா படகுகளையும் மற்றும் சிறு படகுகளையும் சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு அனுப்பி சடலங்களை மீட்கும் பணிக்கு உதவினார் எனவும் —

எனினும் ராணுவத்தினரின் முயற்சி தோல்வியடையவே இன்பருட்டி, பொலிகண்டி, மயிலிட்டிப் பகுதிகளைச் சேர்ந்த இளைஞர்கள் இராணுவத்தினரின் அனுமதியுடன் சுழியோடி உயிரிழந்த மூவரின் சடலங்களை மீட்டனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

மீட்கப்பட்ட கந்தர்வன், சிவோத்தமன், ரவிசங்கர் ஆகியோரது சடலங்கள் மந்திகை ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டபோதுபிரேத பரிசோதனையைப் பருத்தித்துறை பதில் நீதிவான் சு. பா. சுப்பிரமணியம் முன்னிலையில் வைத்திய கலாநிதி எஸ். றஞ்சினி மேற்கொண்டார்.

விபத்து மரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டு சடலங்கள் மாணவர்களது பெற்றோரிடம் நேற்று மாலை ஒப்படைக்கப்பட்டன.

மேற்படி சம்பவத்தினால் வடமராட்சிப் பகுதி நேற்றையதினம் சோகமயமாகக் காணப்பட்டது.

(இ-7-109-118-173)

## 4 பெண்கள்...

(முதலாம் பக்கத் தொடர்)

வருமாறு:-

★ பண்டாரி சந்திரகுமார் [வயது19] கைதடி நுணாவில்.

★ பீற்றர் பொன்கலன் சின்கொனரி [வயது 26] பாண்டியன்தாழ்வு.

★ கணேசன் உசானந் [வயது22] ஆனைக்கோட்டை.

★ [illegible] திரா [வயது 22] உடுவில் தெற்கு. [இ-9-10]

# விவசாயப்பயிற்சிநிலையத்துக்கு போதிய நிதி ஒதுக்கீடு இல்லை

யாழ்ப்பாணம், நவ. 18

திருநெல்வேலி விவசாயப் பயிற்சி நிலையத்துக்குப் போதிய நிதி ஒதுக்கீடு கிடைக்காமையினால் மக்களுக்குத் திருப்தியான சேவைகளை வழங்க முடியாதிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இடப்பெயர்வின் பின் பெருமளவில் பாதிக்கப்பட்டிருந்த விவசாயப் பயிற்சி நிலையத்தினைப் புனரமைப்பதற்கான சகல உதவிகளையும் ஐ. நா. அபிவிருத்தித் திட்டம் வழங்கியது தெரிந்ததே.

ஐ.நா. உதவித் திட்டத்தின் மூலம் மீளக் கட்டியெழுப்பப்பட்ட மேற்படி பயிற்சி நிலையத்தில் விவசாயிகளுக்குத் தேவையான விதை உற்பத்தி மற்றும் தங்குமிட விவசாயப் பயிற்சிகள், மிருக வளர்ப்பு போன்றவற்றை மேற்கொள்வதற்கு நிதியுதவி கிடைப்பதில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

நிதிவளம் இல்லாத காரணத்தினால் விவசாயப்பயிற்சி நிலையச் செயற்பாடுகளில் தளர்வு நிலை தோன்றியுள்ளதாகவும் சுட்டிக் காட்டப்படுகிறது.

[இ-5]

## பழுதடையக்...

(முதலாம் பக்கத் தொடர்)

மாவட்டத்தில் இருந்து கொழும்புக்கு கப்பல் மூலம் பொருள்களை அனுப்புபவர்களுடன் கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றது. அதில் இணக்கம் காணப்பட்டதற்கமைய யாழ்ப்பாணத்தில்உற்பத்தி செய்யப்படும் பொருள்களை கொழும்புக்கு அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அத்தியாவசிய சேவை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

உள்ளூர்உற்பத்திப் பொருள்களின் விற்பனையை ஊக்குவிக்கும் நோக்கில் அத்தியாவசிய சேவை ஆணையாளரால் வாடகைக்கு அமர்த்தப்படும் கப்பல்கள் யாழ். மாவட்டத்துக்கு உணவுப் பொருள்களை ஏற்றி வந்த பின்னர் இங்கிருந்து வெறுமையாக கொழும்புக்குத்திரும்பிச் செல்லும் சந்தர்ப்பங்களில் உள்ளூர் உற்பத்திப்பொருள்களை அனுப்புவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அதற்கமைய —

★ உள்ளூரில் உற்பத்திசெய்யப்பட்ட மரக்கறி வகைகள், வெங்காயம் போன்ற பழுதடையக் கூடிய பொருள்களுக்கு கப்பல் கட்டணம் அறவிடப்படமாட்டாது.

★ பழுதடையாத உற்பத்திப் பொருள்களை ஏற்றும் போது ஒரு மெற்றிக் தொன்னுக்கு 16.25 அமெரிக்க டொலர் கட்டணமும் அதனுடன் சேர்த்து பொருள்கள் சேவைக் கட்டணமாக 12.5 சத வீதமும் சேர்த்து மொத்தமாக 18.28அமெரிக்க டொலர் கட்டணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

★ பொருள்களைப் பருத்தித்துறை துறைமுகத்தில் ஏற்றும் போது ஏற்றுதல் மற்றும் கையாளுதல் கட்டணமாக மெற்றிக் தொன்னுக்கு 250 ரூபா செலுத்த வேண்டும்.

★ இங்கிருந்து ஏற்றும் பொருள்களைக் கொழும்பில் பொறுப்பேற்கும் முகவர்மெற்றிக் தொன்னுக்கு 4 அமெரிக்க டொலர் கட்டணம் செலுத்த வேண்டும்.

எனவே யாழ். மாவட்ட உற்பத்திப் பொருள்களை இங்கிருந்து கப்பல் மூலம் அனுப்பவிரும்புவோர் தமது பெயர் விவரங்களையும்—

பொருள்களைக் கொழும்பில் பொறுப்பேற்க அமர்த்தி உள்ள முகவர்களின் பெயர் விவரங்களையும்—

பொருள்களைப் பொறுப்பேற்கும் முகவர் ஒரு மெற்றிக்தொன்னுக்கு 4 அமெரிக்க டொலரைக் கொழும்பில் இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தில் கட்டணமாகச் செலுத்துவதற்கு சம்மதம் தெரிவிக்கும் கடிதத்தையும்— உடனடியாக யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதியில்சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

இப்படி அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-6)

# ரயில் விபத்து: 10 பேர் காயம்

திருகோணமலை, நவ. 18

திருகோணமலையில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த ரயில் நேற்று மாலை விபத்துக்குள்ளானதில் அதிலிருந்த 10 பயணிகள் சிறு காயங்களுக்கு உள்ளாகினர்.

திருகோணமலை ரயில் நிலையத்தில் இருந்து மாலை 5-15 மணிக்குப் புறப்பட்ட ரயில் 5 கிலோமீற்றர் தூரம் பயணம் செய்த நிலையில் 5-45 மணியளவில் தானியகம என்றஇடத்தில் தடம்புரண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

ரயிலின் நடுப் பகுதியில் இணைக்கப்பட்டிருந்த 3 சரக்கு ரயில் பெட்டிகளே தடம்புரண்டன என்றும் —

பெட்டிகள் தடம்புரண்ட நிலையில் சுமார் 500 மீற்றர் தூரத்துக்கு இழுத்துச் செல்லப்பட்ட பின்பே ரயில் நிறுத்தப்பட்டதாகவும் — தெரிவிக்கப்பட்டது. (இ-6-150)

## தேர்தலை...

(முதலாம் பக்கத் தொடர்)

ணத்தில் ஏனைய தேர்தல்கள் நடத்தப்படுவதற்கான சூழ்நிலை இருக்குமானால் ஏன் மாகாணசபைத் தேர்தல்களை நடத்தமுடியாது என அவர் தனது ரிட்மனுவில் தெரிவித்துள்ளார்.

(இ-7-21)

## இடம்பெயர்ந்த...

(முதலாம் பக்கத் தொடர்)

தெரிவித்தனர்.

நேற்றுக்காலை முதல் கடைகள் சில திறந்திருந்தன. மக்கள் பொருள் களைக் கொள்வனவு செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். நகரப் பாடசாலைகள் பல திறந்திருந்தன. எனினும் மாணவர்கள் வரவு காணப்படவில்லை.

மாவட்டத்தில் சிவில் நிர்வாகம் வழமைக்குத் திரும்பி உள்ளதாக அரசாங்க அதிபர் கே. கணேஷ் தெரிவித்தார்.

வவுனியா நகரத்தையும் அதனைத் சூழ உள்ள பிரதேசங்களையும் பாதுகாப்பதற்கு சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருப்பதாக இராணுவப் பேச்சாளர் சுனில் தென்னக்கோன் தெரிவித்தார்.

வவுனியாவுக்கும் வெளி இடங்களுக்குமான ரயில் சேவைகள் வழமை போன்று இடம்பெற்றன. பஸ் சேவைகள் சிலவும் இடம்பெற்றதாகக் கூறப்பட்டது.

வன்னியில் வெளியிடப்பட்ட அறிவிப்பு ஒன்றை அடுத்தே மக்கள் சொந்த இடங்களுக்குத் திரும்புவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(இ-6-7-8-4-168)

## நூற்றுக்கணக்கான...

(முதலாம் பக்கத் தொடர்)

பேசி இலக்கங்களைப் பதிவுசெய்த விமானப்படையினர் விமான சேவை ஆரம்பிக்கும்போது தகவல் தருவதாகத் தெரிவித்தனர் எனவும் அந்தச் செய்திகள் தெரிவித்தன.

நேற்றும் நேற்று முன்தினமும் இரத்மலானைக்கும் — பலாலிக்கும் இடையிலான விமானசேவை இடம்பெறவில்லை என்பது தெரிந்ததே. (இ-7-164)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.11.1999 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org